# வருடாந்த அறிக்கை
# 2011




IPS இலங்கை கொள்கை ஆய்வு நிலையம்

# IPS

## தலைவரின் செய்தி

கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் (கொ.க.நி – IPS) முடிவடைந்த 2011 ஆம் ஆண்டை மீள் நோக்கி செயலாற்றுகை மீளாய்வினை மேற்கொள்கின்ற போது அளவிலா திருப்தி ஏற்படுகின்றது. அண்ணளவாக முப்பது வருடங்களாக நாட்டினை உருக் குலைத்துக் கொண்டிருந்த பிரிவினை வாதப் போர் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, 2009 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இலங்கைக்கு அமைதி ஏற்பட்டது. இலங்கை மக்கள் மற்றும் அமைப்புக்கள் மற்றுமல்லாது நிறுவனங்கள் சமாதானம் வந்ததைத் தொடர்ந்து பாரியளவான நன்மைகளை எதிர்பார்த்தனர். 2009 ஆம் ஆண்டில் நாட்டின் அரசியல் சூழலில் ஏற்பட்ட இந்த மாற்றங்கள் பற்றி பிரகாசமான எதிர்பார்ப்புக்கள் 2010 ஆம் ஆண்டுக்கான கொள்கை கற்கைகள் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளன. பொருளாதார வளர்ச்சி, நிலைத்த தன்மை மற்றும் மனிதாபிமான அபிவிருத்தி தொடர்பான சாதகமான நிலைமைகள் 2010 ஆம் ஆண்டில் சமாதானம் மற்றும் பாதுகாப்பை ஏற்படுத்தியதுடன் அவை 2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தன. குறிப்பாக பிரிவினை வாதத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள்நிருமானம், இனங்களுக்கடையேயான ஒருமைப்பாடு மற்றும் அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்கான உத்தியோகபூர்வ முயற்சிகள் தற்பொழுது படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றன.

2010 ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட அமைதி மற்றும் பாதுகாப்பின் மூலம் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி, நிலைத்த தன்மை மற்றும் மானிட அபிருத்திக்கான சாத்தியமான நிலைமைகள் 2011 ஆம் ஆண்டிலும் கூட தொடர்கின்றன. பிரிவினை வாத யுத்தத்தினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த பிரதேசங்களை புனர்நிர்மாணம் செய்தல், ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்கான உத்தியோக பூர்வ முயற்சிகள் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றன. ஏற்கனவே பிரிவினை வாதத்திற்கும் பிரிவினை வாதப் போருக்கும் இட்டுச் சென்ற பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வுகள் தொடர்பான எதிர்பார்ப்புக்கள் அதிகரித்துள்ளதுடன் அதற்கான நிலைமையும் கிரமமாக வெற்றியளித்து வருகின்றது. அதன் ஊடாக தேசிய ஒற்றுமையும் நிலையான சமாதானத்தையும் நிலை நாட்டுதல் மிக முக்கியமாகும். இந்த பொது, சமுக அரசியல் நிலைமைகள் நிச்சியமாக பெறுமதிமிக்கதாகவும் இலங்கைக் கொள்கை கற்கைகள் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு உறுதியளிப்பதுடன் இவை இந் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

சுற்றுச் புற சமுக அரசியல் சூழலில் இந்த சாத்தியமான நிலைமைகள் இரட்டிப்பாகி உள்ளதுடன், இவ்வாண்டில் நிறுவனத்தின் செயலாற்றுகையினை உறுதிப்படுத்துவதற்கு உள்ளக அபிவிருத்திகள் உதவி புரிந்துள்ளன. முதலாவதாக, கடந்த வருடம் இலங்கைக் கொள்கைக் கற்கைகள் நிறுவனம் அதன் சொந்த வழாகமான சுதந்திர சதுக்கத்திற்கு மீண்டும் திரும்பியதைத் தொடர்ந்து நிலையான மற்றும் சகல உட்கட்டமைப்பு வதிகளுடனும் கூடிய மனோரம்யமான சூழலின் கீழ் பணியாற்றும் வகையில் இந் நிறுவனம் நிலை பெற்றுள்ளது.

கொள்கைக் கற்கைகள் நிறுவனமானது அதன் புதிய வழாகத்தில் தனது முழுமையான முதல் வருட மீளாய்வினை மேற்கொண்டுள்ளது. இந் நிறுவனத்தின் சகல அங்கத்தவர்களும் தமது புதிய நிறுவனம் தொடர்பில் தமது திருப்தியை வெளிக்காட்டுவதுடன் சந்தோசமாகவும் செயற்படுகின்றனர். கொழும்பு சுதந்திர சதுக்க பொது நகர அபிவிருத்திப் பணியின் கீழ் கொள்கைக் கற்கைகள் நிறுவன சூழலின் அழகு அதிகரிக்கப்பட்டு ஆராய்ச்சி நிறுவனமொன்றிற்கு இருக்க வேண்டிய சகல வசதிகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்டமைந்து உள்ளது.

இரண்டாவதாக, கடந்த பல வருடங்களாக அமுல்படுத்தப்பட்டு வந்த மனித வள அபிவிருத்தி தொடர்பான நீண்ட கால திட்டங்களின் நன்மைகளை இந் நிறுவனமானது 2011 ஆம் ஆண்டில் அடைந்து கொண்டுள்ளமை பற்றி இந்த ஆண்டறிக்கையின் பின்வரும் பக்கங்கள் வெளிக் காட்டுகின்றது. நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளரினால் திறைமையாக முகாமை செய்யப்படுகின்ற சுதந்திரமான ஆய்வுகளுக்காக அர்பணிக்கப்பட்ட உயர் தகைமை மற்றும் பயிற்றப்பட்ட இணை பதவியணியனர் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியான கொள்கை ஆய்வுகளை மேற்கொள்கின்ற உயர் அங்கிகாரம் உடைய நிறுவனமாக கொள்கைக் கற்கைகள் நிறுவத்தை ஆக்குவதற்கு பங்களிப்புச் செய்துள்ளனர். இந் நிறுவனத்தின் ஆய்வுப் பெறுபேறுகள் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஆகிய இரண்டு ஊடகங்களின் ஊடாகவும் கல்வியாளர்கள் மற்றும் தொழில்சார் ஆய்வாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், அவதானிப்பாளர்கள் மற்றும் பொது மக்கள் போன்ற வகுதியினர்களின் கொள்கைப் பிரச்சினைகள் பற்றிய முக்கியமான விளிப்பூட்டல்களை வழங்கி வருகின்றது.

மூன்றாவதாக, இந் நிறுவனத்தின் 2011 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றுகை மேம்பாடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு இந்த ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு உள்ளன. கனடா நாட்டின் ஐ.டி.ஆர்.சி (IDRC ) நிறுவனத்தின் முக்கிய அபிவிருத்தி நன்கொடை உதவி இந்த நிறுவனத்தின் நிதிப் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கு உதவி புரிந்துள்ளது.

சர்வதேச ஆய்வுகளுகளுக்கான நிதியளிப்பு மந்த நிலையினை காணப்பட்ட கால கட்டத்திலும் கூட, கொள்கைக் கற்கைகள் நிறுவனமானது மிகவும் வினைத்திறனாக சர்வதேச ரீதியான ஆய்வுகள் தொடர்பாக நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடிந்துள்ளது. மீளாய்வு ஆண்டின் போது சமுகத்தில் நிறுவனமானது தமது நற்பெயரினை வலுப்படுத்தியிருக்கின்றது. இந் நிறுவனத்தின் தகவல் தெரிவிப்பு கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் தொடர்ச்சியாக பாரிய அளவிலான மக்களை கவர்ந்து வருகின்றன. கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் வழாகம், அதனது கேட்போர் கூட வசதிகள் உள்நாட்டு மற்றும் சர்வதேச முகவரங்களின் வலுவான கேள்விகளுக்கான அடித்தளமாக அமைந்துள்ளன. ஆண்டின் போது, ஆசியாவில் ஒத்த தன்மையான குறிக்கோள்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் செயற்பாடும் ஆய்வு நிறுவனங்களுக்கு மத்தியில் இந் நிறுவனத்தின் சர்வதேச நற்பெயர் மென் மேலும் வலுப் பெற்றுள்ளது.

மீளாய்வு ஆண்டில் நிறுவனத்தின் பணிகளை வழிநடாத்திய பணிப்பாளர் சபையின் பணிகள் மற்றும் அத்துடன், இந் நிறுவனதத்திற்கான நிருவாகத் தலைமைத்துவத்தை வழங்கியுள்ள நிறைவேற்றுப் பணிப்பாளர்களையும் பாராட்டுவதற்கு இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கின்றேன். பணியாற்றக் கூடிய சூழல் மற்றும் மனித வள அடிப்படை தொடர்பில் மேம்படுத்தப்பட்ட மற்றும் வலுப்படுத்தப்பட்ட நிலமைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு கொள்கைக் கற்கைகள் நிறுவனம் என்ற வகையில் இந்த ஆண்டில் கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் மீது இந்த நாட்டில் கொள்கை உருவாக்குனர்கள், வலுவாக நம்பிக்கை வைத்துள்ளனர் என நான் நிச்சியமாக எண்ணுகின்றேன்.

பேராசிரியர் (எமரீடர்ஸ்) டப். டி. லக்ஸ்மன்
தலைவர்

# IPS

# நிறைவேற்றுப் பணிப்பாளரின் அறிக்கை

கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் புதிய தலைமை அலுவலகத்தின் கீழ் தொழிற்பட்டு முழுமையான முதல் வருடத்தினை 2011 ஆண்டு பதிவு செய்துள்ளதுடன் இந்த புதிய வழாகத்தில் காணப்படுகின்ற வசதிகளை முழுமையாக பயன்படுத்தும் பொருட்டு பல திட்டங்கள் தீட்டப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளன.

கேட்ப்போர் கூடத்தின் உள்ள வேலைகளை பூர்த்தி செய்தமை இவ் வருடத்தில் இந் நிறுவனம் அடைந்து கொண்ட ஒரு மிக முக்கிய வெற்றியாகக் கருதப்பட்டுகின்றது. 2011 ஆம் ஆண்டு யூலை மாத நடுப்பகுதியில் கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் பதவியணி மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் பிரசன்னமாய் இருக்கும் போது தலைவரினால் இந் நிறுவனம் திறந்து வைக்கப்பட்டது. அன்று முதல், இந்த கேட்போர் கூடமானது கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் பல மாநாடுகள் / செயலமர்வுகளுக்குப் பயன்படுத்தப்பட்டதுடன் மேலும் மூன்றாம் நபர்களுக்கும் இந்த நிறுவனம் வாடகைக்கு விடப்படுகின்றது.

நட்டம் ஏற்பட்ட 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வு ஆண்டின் போது முழு மொத்த இலாபத்துடன் குறிப்பிடத்தகு அளவில் நிதிப் புரழ்வினை கொள்கைக் கற்கைகள் நிறுவனம் காட்டுகின்றது. புதிய கட்டிடத்தை குத்தகைக்கு விடல், டி.டி.ஐ வருமான ஒத்துழைப்பு (Think Tank Initiative) நன்கொடை என்பவற்றின் காரணமாக 2010 ஆம் ஆண்டின் ரூபா 30 மில்லியன் தொகை செயற்திட்ட வருமாத்துடன் ஒப்பீடு செய்யும் போது 2011 ஆம் ஆண்டில் அண்ணளவாக இது ரூபா 33 மில்லியன் வரை அதிகரித்தமை போன்ற காரணிகளினால் இந்த நிலைமை ஏற்பட்டது, 2011 ஆம் ஆண்டில் நிலவிய குறைந்த வட்டி வீதம் காரணமாக முதலீடுகள் குறைவடைந்தமை மற்றும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் காரணமாக இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்பானது ரூபா 1.3 மில்லியன் அளவினால் குறைந்தமை போன்றன இடம் பெற்றிருக்காவிட்டல் இந் நிறுவனத்தின் நிதிச் செயலாற்றுகையானது இந் நிலைமையிலும் பார்க்க இன்னும் ஒரு படி முன்னேற்றமடைந்திருக்கும். 2011 ஆம் ஆண்டின் செயலாற்றுகைக்கு ஏற்ப 2012 ஆம் ஆண்டின் செயலாற்றுகையினை மேம்படுத்துவதற்கு கொள்கைக் கற்கைகள் நிறுவனம் இலக்கு வைத்துள்ளது.

நீண்ட காலமாக தாமதமாகி இருந்த வெளியக கணக்காய்வுக் குழு 2010 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் உருவாக்கப்பட்டு உள்ளதுடன் ஆண்டின் போது நான்கு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. நிறுவனத்தின் கணக்குகளை மேம்படுத்தும் பொருட்டு கணக்காய்வுக் குழுவினால் பல புதிய ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டு உள்ளன. நிறுவனத்தின் நன்கொடை நிதி நிலமை பற்றியும் பரீட்சிக்கப்பட்டதுடன் நிறுவனத்தின் கணக்குகளை ஒருங்கிணைப்பதற்கும் அல்லது நம்பிக்கை நிதியம் ஒன்றின் ஊடாக அதன் தனித்துவத்தைப் பேணும்படியும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு ஆலோசனைகளையும் கொள்கைக் கற்கைகள் நிறுவன பணிப்பாளர் சபை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆண்டின் போது 21 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 17 புதிய செயற்திட்டங்களை பெற்றுக் கொள்வதில் வெற்றியும் அடைந்துள்ளது. குறிப்பாக, இந்தப் புதிய செயற்திட்டங்களில், இலங்கைக்கான இரண்டாவது தேசிய மனிதவள அபிவிருத்தி அறிக்கையினை தயார் செய்தல், இலங்கை குடிபெயர்வு கோவையினை தயார் செய்தல், சிறுவர் நலன்புரி மற்றும் ஒப்புரவுச் செயற்திட்டங்கள் உள்ளடங்குகின்றன. பூர்த்தியடைந்த செயற்திட்டங்களில், ஆ.அ.வ. – ரீட்டா (ADB-RETA) நிதியளிப்பின் கீழ் எஸ்.ஏ.சி.இ.பி.எஸ். (SACEPS) நிறுவனத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மூன்று செயற்திட்டங்கள் 2012 ஆம் ஆண்டில் எட்வாட் எல்கார்

ஆல் வெளியிடப்பட்ட தொகுதியில் அத்தியாயங்களாக உள்ளடக்கப்பட்டன. 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அமைக்கப்பட்ட ஊழியர் குடிபெயர்வு தொடர்பான ஆலோசனைக் குழுவின் ஒரு பிரதிநிதியாக கொள்கைக் கற்கைகள் நிறுவனம் அங்கம் வகிக்கின்றது. அதனைத் தொடர்ந்து, குடிபெயர்வுடன் தொடர்புடைய பணிகள் துரித வளர்ச்சியை வெளிக்காட்டுதாக இலங்கை கற்கைகள் நிறுவன ஆய்வுகள் வெளிப்படுத்துவதுடன் நிறுவனத்தின் இணைய தளத்தில் குடியெர்வு வலையமைப்பொன்றை ஆரம்பிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

ஆண்டின் போது கொள்கைக் கற்கைகள் நிறுவனமானது ஒன்பது வெளியீடுகளை பிரசுரித்துள்ளதுடன் இவற்றில் மூன்று புத்தகங்களும் உள்ளடங்குகின்றன அவையாவன: (1) குடிபெயர்வு மாற்றல்கள் மற்றும் தென் ஆசியாவின் அபிவிருத்தி (2) வர்த்தக சுதந்திரமயமும் தென் ஆசியாவின் வறுமை நிலை மற்றும் (3) இலங்கையில் சந்தைப் பொருளாதாரக் கட்டுப்பாட்டின் கீழ் பொருளியல் மற்றும் சமுக அபிவிருத்தி. ஆண்டின் போது 25 இற்கு மேற்பட்ட பதவிகள் காணப்பட்டதுடன் அவை யாவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அச்சு ஊடகங்களில் பிரிசுரிக்கப்பட்டன. அராபிய எழுச்சி, புகோள இரட்டிப்பு பொருளாதார மந்த நிலை, யப்பானிய பூமி அதிர்ச்சி முதலியன 2011 ஆம் ஆண்டில் பூகோள பொருளாதாரத்தை ஆக்கிரமித்ததுடன் எங்களுடைய சில கட்டுரைகள் இலங்கையின் பொருளாதாரத்தில் அவை ஏற்படுத்தும் தாக்கம் பற்றி எதிர்வு கூறியும் உள்ளன. 2010 ஆம் ஆண்டின் கட்டுறைகள் மற்றும் 2011 ஆம் ஆண்டின் முதற் பகுதியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளையும் உள்ளடக்கி உள்ளக வங்கி மற்றும் டி.டி.ஐ நன்கொடை அனுசரனையுடன் இரண்டு மாறுபட்ட வெளியீடுகளாக பிரசுரம் செய்யப்பட்டுள்ளன.

கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் பிரதான வெளியீடு – அரசாங்க பொருளாதாரம் இலங்கையில் யுத்தத்தின் பின்னரான வளர்ச்சி நிலைமைகள் பற்றி கவனம் செலுத்தி உள்ளது. முதன் முறையாக, அங்குராப்பன அமர்வின் போது இரண்டு பிரதான அமைச்சர்களின் பங்குபற்றலுடன் பாரிய மாநாடொன்றில் இந்த அறிக்கை அறிமுகம் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் பெருந் தொகையான பொருளாதார பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஆண்டின் போது, இந்த அறிக்கையில் விபரித்துள்ள பிரகாரம் நிறுவனமானது 9 உள்ளக கருத்தரங்குகள் / செயலமர்வுகளை நடாத்தி உள்ளது. கொள்கை கலந்துரையாடலுடன் (யு.என்.டி.பி. ஒத்துழைப்புடன்) வறுமையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் கொண்டாடப்பட்டதுடன் முதன் முறையாக புதிய கேட்ப்போர் கூடத்தில் யாழ்ப்பான பல்கலைக் கழகம் மற்றும் ருஹுனு பல்கலைக் கழகங்களை இணைப்பதற்கான வீடியொ மாநாட்டு வசதி பயன்படுத்தப்பட்டது. வரி மற்றும் அபிவிருத்திக்கான ஐக்கிய இராச்சிய சர்வதேச நிலையத்துடன் இணைந்து வரி தொடர்பான மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டதுடன் வரிவிதிப்பு தொடர்பான சனாதிபதி ஆணைக்குழுவினால் முன் மொழியப்பட்ட வரி தொடர்பான பல பிரச்சினைகள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டன. இந்த கருத்தரங்கின் அங்குராப்பன நிகழ்வின் போது இரண்டு சிரேட்ட அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

பல சர்வதேசக் கருத்தரங்குகள் / செயலமர்வுகளில் குறிப்பாக தென் ஆசிய பிராந்தியத்துடன் தொடர்புடைய பல நிகழ்வுகளில் கொள்கைக் கற்கைகள் நிறுவன ஆய்வாளர்கள் பங்குபற்றி உள்ளார்கள். இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன : தென் ஆசிய பேரவை, தென் ஆசிய வெளிநாடுகளில் வாழ்பவர்களின் மாநாடு, நான்காவது ஆசிய பொருளாதார மாநாடு, சாக் வர்த்தகத் தலைவர்களின் ஒன்று கூடல், தென் ஆசிய மீள்உருவாக்கம் தொடர்பான உலக மாநாடு, ஒன்றிணைந்த பாதுகாப்பு வேலைச் சட்டகம் தொடர்பான 5வது தென் ஆசிய மாநாடு, சாக் ஜனநாயக பிரகடனம்: பிரசைகளின் முன்னெடுப்புக்கள், தென் ஆசியாவில் பொருளாதாரச் சுதந்திரம் மற்றும் வியாபாரச் சூழல் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் ஒருமைப்பாடு தொடர்பான அறிவுப் பரிமாற்றம். கடைசியாகக் குறிப்பிட்ட மாநாட்டின் ஊடாக கொள்கைக் கற்கைகள் நிறுவனம் நவம்பர் மாத ஆரம்பத்தில் மாலைதீவில் நடைபெற்ற 17 வது சாக் உச்சி மாட்டிற்கான உள்ளீடுகளை வழங்கியது. கைத்தொழில் மயப்படுத்தல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய பல கருத்தரங்குகளில் கொள்கைகள் கற்றை நிறுவன ஆய்வாளர்கள் பங்குபற்றியுள்ளனர்.

முன்னைய வருடங்களைப் போன்று, கொள்கைக் கற்கைகள் நிறுவனமானது அரசாங்கம், தனியார் துறை மற்றும் நன்கொடையாளர்களுடன் மிக நெருக்கமாக பணியாற்றுகின்றது. இந்து சமுத்திர விஞ்ஞான மற்றும் சுற்றாடல் தொடர்பான அதி உன்னத நிலையத்தை நிருவுவதற்கான ஒரு பிரேரணையினை ஏனையவர்களுடன் நிதி, திட்டமிடல் அமைச்சிற்கு சமர்ப்பித்துள்ளது. கொள்கைகள் கற்கை நிறுவனத்தின் தனியார் துறைக்கான பங்களிப்பானது பிரதானமாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியின் பிரச்சினைகள், கூட்டாண்மை சமுகப் பொறுப்புக்கள் தொடர்பானவையாகும், அவையாவன: சிறந்த கூட்டாண்மை பிரசைகள் விருது, பெறுமதி சேர்ப்புக்கான தேயிலை இறக்குமதி சுதந்திர மயப்படுத்தலின் நன்மைகள் மற்றும் தீமைகள் முதலியன பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் பிரதான நன்கொடையாளர்களான உலக வங்கி, ஆ.அ.வ (ADB)., ஆசிய பவுண்டேசன் மற்றும் யு.என்.டி.பி (UNDP) நிறுவனங்களுடன் பணியாற்றி உள்ளதுடன் யு.என்.டி.பி (UNDP) நிறுவனத்துடன் இணைந்து மனிதவள அபிவிருத்தி அறிக்கை 2011 மற்றும் ஆசிய மற்றும் பசுபிக் வலய வர்த்தக மற்றும் முதலீட்டு அறிக்கை (UNESCAP) ஆகிய இரண்டு அறிக்கைகளை வெளியிட்டு உள்ளது.

கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் இயலளவினைக் கட்டியெழுப்பல் மற்றும் நிறுவன வலுப்படுத்தல் தொடர்பான பாரிய பங்களிப்பாக கடந்த ஆண்டில் எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள டி.டி.ஐ நன்கொடை காணப்படுகின்றது. இந்த நன்கொடையானது இந்த நிறுவனத்தின் நிதி நிலைமையினை உறுதிப்படுத்தியது மட்டுமல்லாது நீண்ட பணிகளுக்கு வழிவகை செய்தன மாத்திரமன்றி மாறாக பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதற்கும் உதவி புரிந்தது. இந்த அறிக்கையில் குறிப்பிட்டது போன்று, அந்த நன்கொடை கிடைக்காவிட்டால் இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய முடியாது போய் இருக்கும். முதன் முறையாக, நிறுவனத்தை வலுப்படுத்தும் பொருட்டு புதிய சிந்தனைகளை முன்வைக்குமாறு பதவியணியினர்களுக்கு இந் நிறுவனத்தால் சந்தர்பம் ஒன்று வழங்கப்பட்டது.

பதவியணி தொடர்பில். ஆண்டின் போது ஒரு ஆராய்சி மாணவர் பி.எச்.டி பட்டத் தகைமையினை அடைந்து கொண்டதுடன் பல செயற்திட்டங்கள் தொடர்பாக ஈடுபடுத்தப்பட்டதுடன் ஆராய்ச்சிப் பதவியணி தொடர்பாக புதிய மூன்று ஆட்சேர்ப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், தகவல் தொழில் நுற்பப் பிரிவினை நவீனமயப்படுத்துவதற்கு முக்கியமாக தகவல் பிரிவின் தலைவர் பணியாற்றி உள்ளதுடன் தனியார் துறை நிலைமையிலிருந்து விடுபடுவதற்கு வழிவகை செய்துள்ளார்.

இது எங்களுக்கு புதிதன்று மற்றும் இவ்வாறனதொரு பதவியணியினைக் கொண்டு இருப்பதால் எமது நிறுவனத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்பாடுகள் தங்குதடையின்றி நகர்ந்து செல்லும் பொருட்டு இரண்டாவது கட்ட சிறப்பு பதவியணியையும் தன் வசம் வைத்துள்ளது. இந்த அறிக்கையில் குறிப்பிட்ட பிரகாரம், அனேகமான பதவியணி அங்கத்தவர்கள், பல்வேறு பட்ட பயிற்சிப் பாடநெறி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இவ்வாண்டின் போது அனுப்பப்பட்டுள்ளனர்.

புதிய கட்டிடத் தொகுதிக்கு வந்ததன் பின்னர், பல புதிய பரப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு உள்ளன. நிறுவன வழாகத் தோட்டம் மற்றும் அதில் உள்ள நீர்த் தடாகத்தை பராமரிப்பதற்காக உள்ள முகாமைக் குழு ஒன்று நியமிக்கபட்டுள்ளதுடன் அத் தோட்டம் மற்றும் நீர்த் தடாகம் உட்பட வழாக அழகு படுத்தலில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 2011 ஒக்டோபர் மாதம் திகதி புதிய கட்டிடத் தொகுதி தொடர்பாக வெளியிடப்பட்ட உறுதிப்படுத்தல் சான்றிதழுடன், கட்டிடத்தின் கட்டமைப்பை பூர்த்தி செய்யும் பொருட்டு மேலதிக வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

முழு அளவில், கொள்கைக் கற்கைகள் நிறுவத்திற்கானதொரு புதிய ஆரம்பம் தெளிவாகி உள்ளது. 2011 ஆண்டினை ஒரு மறக்க முடியாத ஆண்டாக மாற்றியமைப்பதற்கு தங்களது முழு மொத்த ஒத்துழைப்பை

வழங்கிய ஐ.பி.எஸ் நிருவாக சபை அங்கத்தவர்கள் மற்றும் பதவியணியினருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இச் சந்தர்பத்தை பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

**சமன் கெலகம**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**
**யூன் 2012**

# IPS
# ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களின் பிரதான இலக்காக இருப்பது இலங்கைக்கான நடுத்தர கால பொருளாதார கொள்கை முன்னுரிமைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்களுக்கு ஆக்க பூர்வமான பங்களிப்பை வழங்குவதாகும். வேலையின்மை, பிராந்திய சமநிலையற்ற தன்மை மற்றும் கிராமிய வறுமை போன்ற நாட்டுடன் தொடர்புடையதாக இருக்கின்ற பல அபிவிருத்திப் பிரச்சினைகள் தொடர்பான பல வெளியீடுகளை காலத்துக்கு காலம் நிறுவன ஆய்வுகள் ஊடாக வெளியிட்டுள்ளது. தற்பொழுது மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களின் குறிக்கோளாக இருப்பது ஏற்னவே மேற்கொள்ளப்பட்ட பாரிய அளவிலான பணிகளை கட்டியெழுப்பல், தற்பொழுதுள்ள ஆராய்சிக் குழுவில் உள்ள குறைபாடுகளை அடையாளம் காணல், ஒருங்கிணைந்த நடுத்தர கால வேலை நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை உருவாக்குதல் என்பனவாகும். நாட்டின் அபிவிருத்தி முன்னுரிமைகளை அடைந்து கொள்வதற்கு மிகவும் முக்கியமாக நிலையானதும் சமநிலையான வளர்ச்சியினை அடைந்து கொள்வதற்குமான உபாயங்கள் பற்றி இந்த நிகழ்ச்சித்திட்டம் கவனம் செலுத்துகின்றது.

எங்களுடைய ஆராய்சி பரிவுகளின் ஊடாக கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் நிகழ்ச்சி நிரல் முழுமையாக நிரப்பப்பட்டுள்ளதுடன் அவ் ஒவ்வொரு பிரிவும் சிரேட்ட பதவியணி அலுவலரினால் தலைமை தாங்கப்படுகின்றது. நிறுவனத்தின் பணி தொடர்பான முழுமையான நெறிப்படுத்தலை உறுதிப்படுத்தும் வகையில் ஒவ்வொரு பிரிவும் நடுத்தர கால ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டு செயற்படும் வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அவ் ஆராய்ச்சி அலகுகள் கீழ் வருமாறாகும்:

- நுண்பாகப் பொருளாதாரக் கொள்கை
- சர்வதேச பொருளாதாரக் கொள்கை
- ஊழியர், தொழில்வாய்ப்பு மற்றும் மனித வள அபிவிருத்திக் கொள்கை
- கைத்தொழில், அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் கொள்கை
- வறுமை மற்றும் சமுக நலன்புரிக் கொள்கைகள்
- விவசாயப் பொருளாதாரக் கொள்கை
- சுற்றாடல் பொருளாதாரக் கொள்கை
- சுகாதார பொருளாதாரக் கொள்கை

மேலும், 2011 ஆம் ஆண்டில், எங்களுடைய ஆராய்சி நிகழ்ச்சி நிரல் ஆறு பாரிய கோட்பாட்டு பரப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தி உள்ளது. பல்பக்க ஆராய்சி அணுகுமுறையை நோக்கிய மாற்றத்தை வெளிப்படுத்தி இந்த ஆய்வுக் கற்கைகள் இவ்வாண்டில் கவனம் செலுத்தியுள்ளதுடன் அவை அலகு அடிப்படையில் வேறுபடுத்தப்படாது மாறாக கோற்பாட்டு ரீதியாக பிரிக்கப்பட்டுள்ளன. அந்த ஆறு கோற்பாட்டு ரீதியான அணுகுமுறைகள் கீழ் வருமாறு :

1. குடியகல்வு மற்றும் அபிவிருத்தி
2. மனித அபிவிருத்தி மற்றும் சமுக உட்கட்டமைப்பு

3. யுத்தத்தின் பின்னரான வளர்ச்சி
4. வெளிவாரிப் போட்டித்தன்மைகள்
5. வறுமையும் சிக்கல்களும்
6. புத்தாக்கங்களும் வெளியக வளர்ச்சிக் காரணிகளும்

கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக நிறுவனத்தின் நிதியளிப்பு மற்றுமல்லாது உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்காண்மையாளர்கள் ஆகிய இருசாரரின் இணைந்த செயற்திட்டங்களின் நிதியளிப்புக்கள் ஊடாகவும் ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

# IPS
## உள்ளக கருத்தரங்குகள்

| தலைப்பு | நடாத்துபவர் | திகதி |
|---|---|---|
| இலங்கையின் விவசாயத் துறை மற்றும் ரிப்ஸ் உடன்படிக்கை | திலானி ஹிரிமுதுகொடகே<br>ஆய்வு உதவியாளர்,<br>ஐபிஎஸ் | பெப்ரவரி 11 |
| சேவைதுறையில் மாடலின் வர்த்தகம் | டாக்டர். தேனுவர,<br>இணைப்பு பேராசிரியர்,<br>லோவா பல்கலைக் கழகம்,<br>மற்றும் முன்னாள் உதவி ஆளுனர்.<br>மத்திய வங்கி. | ஏப்ரல் 26 |
| இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீடு : மலேசியாவுடனான ஒரு பகுப்பாய்வும் எதிர்கால வாய்ப்புக்களும் | கலாநிதி. சலக்க சுபசிங்க, பிரதிப் பொது முகாமையாளர், இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம், | மே 26 |
| வரிவிதிப்பு, நல்லாட்சி மற்றும் அபிவிருத்தி | பேராசிரியர். மிக் மூர்.<br>தொழில்சார் ஆய்வாளர் மற்றும் பி.நி.அ.,<br>வரி மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச நிலையம், ஐ.டி.எஸ்,<br>சசெக்ஸ் பல்கலைக்கழகம், | யூலை 04 |
| இலங்கையில் யுத்தத்தின் பின்னரான சமூகங்களின் சமுக பொருளாதார நிலைமைகள் | பேராசிரியர். மிக் மூர்.<br>தொழில்சார் ஆய்வாளர் மற்றும் பி.நி.அ.,<br>வரி மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச நிலையம், ஐ.டி.எஸ், IDS,<br>சசெக்ஸ் பல்கலைக்கழகம், | யூலை 04 |

| | | |
|---|---|---|
| இலங்கையில் பொருளாதாரச் செயற்பாடுகளின் ஒரு ஊடகமாக போக்குவரத்துத் துறை தொடர்ந்தும் செயற்பட முடியுமா? | கலாநிதி. லலிதசிரி குணவர்தன, சிரேட்ட விரிவுரையாளர், பொருளியற் திணைக்களம், கொழும்புப் பல்கலைக் கழகம். | செப்தெம்பர் 14 |
| உண்மை நாணயமாற்று வீதம் மற்றும் இலங்கையில் கட்டமைப்பு ரீதியான மாற்றமும் : இங்கு ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா? | பிரான்சிஸ் ரோ, சிரேட்ட தேசிய பொருளியலாளர், இலங்கை மற்றும் மாலைதீவு, தென் ஆசியப் பிராந்தியம், உலக வங்கி. | நவம்பர் 01 |
| 2011 ஆம் ஆண்டு வருமான வரிமறுசீரமைப்பு அமுல் படுத்தல் மற்றும் அரச ஊழியர்கள் உழைக்கும் போது வரி செலுத்தும் பொறுப்பை ஏற்படுத்தல். | பிரயங்கா ஜயவர்தன, பிரதான பொருளியலாளர், பிராந்திய பொருளியல் ஒருங்கிணைப்பு அலுவலகம், ஆசிய அபிவிருத்தி வங்கி, மனிலா, | திசம்பர் 23 |
| ஆசியான் எப்.ரீ.எஸ்: போக்குகள், முன்னேற்றங்கள் மற்றும் மாற்றங்கள் | கலாநிதி. கணேசன் விக்னராஜா, பிரதான பொருளியலாளர், பிராந்திய பொருளியல் ஒருங்கிணைப்பு அலுவலகம், ஆசிய அபிவிருத்தி வங்கி, மனிலா, | டிசம்பர் 21 |

# IPS
# வெளியீடுகள் - 2011



## சுகாதார புள்ளிவிபரங்கள் 2010

தனியார், கூட்டுறவு மற்றும் அரச வைத்தியசாலைகளின் 2005 - 2008 ஆம் ஆண்டு வரையான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நான்காவது தொடர்ச்சியான வெளியீடாகும். கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் தேசிய சுகாதார கணக்குகளுக்கான ஒரு துணை வெளியீடாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றும் இத் துறையின் அபிவிருத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் தொடர்பாக 2006 ஆம் ஆண்டில் இலங்கை பாராளுமன்றத்தில் தனியார் மருத்துவ நிறுவன ஒழுங்குமுறைப்படுத்தல் சட்ட மூலமானது சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

அரச வைத்தியசாலைகள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளுக்கிடையில் உள்ள வேலைப் பழுவினை குறைத்துக் கொள்ளும் பொருட்டு உத்தியோக பூர்வமற்ற வேலைப் பகிர்வின் காரணமாக இன்று இலங்கையின் மருத்துவ சிகிச்சை முறைமையானது உயர் தரத்தினை அடைந்துள்ளது.

தனியார் மருத்துவ நிலையங்களின் ஊடாக மேற்கத்தேய மருத்துவச் சிகிச்சை, மற்றும் ஆயுர் வேதம், ஹோமியோபதி மற்றும் சீன பாரம்பரிய மருத்துவம் போன்ற ஏனைய வகையான மருத்துவ சிகிச்சை முறைகளையும் வழங்குகின்றன. தனியார் மருத்துவ நிலையங்களினால் பெருவாரியாக மேற்கத்தேய மருத்துவ சிகிச்சைகளே வழங்கப்படுகின்ற, மற்றும் அதன் ஊடாக சேவைகள் பாரிய அளவில் மேற்கொள்ளப்படுகின்றன. தனியார் துறை மருத்துவ மனைகளினால் வழங்கப்படுகின்ற சிகிச்சை முறைகளில் பாரிய அளவானது அரச வைத்திய சாலைகளில் கடமையாற்றுகின்ற தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் தங்களுக்கு தனியார் மருத்துவ நிலையங்களில் சேவையாற்றுவதற்கு வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரமே சேவையாற்றுகின்றனர். அரச வைத்திய சாலைகளில் கடமையாற்றுகின்ற வைத்தியர்கள் தாங்கள் அரச வைத்திய சாலையில் ஒரு நாளில் வேலை செய்ய வேண்டிய ஆகக் குறைந்த கடமை நேரத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் தனியார் மருத்துவ மனைகளில் கடமையாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டு உள்ளனர். தனியார் துறை அரச வைத்தியசாலைகளின் இயலளவானது பிரதானமாக இந்த வைத்திய சாலைகளில் சேவையாற்றும் அரச வைத்தியர்களின் எண்ணிக்கையிலேயே தங்கி உள்ளது. சில வைத்தியசாலைகளில் வேறு நாடுகளிலிருந்து வருகை தந்து கடமையாற்றுகின்ற வைத்தியர்களும் உள்ளனர். ஏனெனில் இருதயச் சத்திர சிகிச்சைகள் சிக்கலானதும் அவசரமாகச் செய்ய வேண்டியவையாகவும் இருப்பதனால் அவ்வாறான சத்திர சிகிச்சைகளுக்கான கேள்வி நாளாந்தம் அதிகரித்து வருகின்றமையுமே இதற்கான காரணமாக உள்ளன.

http://www.ips.lk/publications/series/healthecon.html

## பொருளாதாரம் பற்றி கூறுகின்ற அறிக்கை ( சனவரி – திசம்ர் 2010 )



2010 ஆம் ஆண்டில் கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் "பொருளாதாரங்களைப் பற்றிக் கூறுதல்" பகுதியில் வெளியிடப்பட்ட பல வெளியீடுகளின் தொகுப்பாக இந்த அறிக்கை காணப்படுகின்றது. சர்வதேச பொருளாதாரச் சந்தையின் மாற்றமடைந்து வரும் தன்மைகள் முதல் உள்நாட்டு வறுமை ஒழிப்பு மற்றும் அபிவிருத்தியின் மிக முக்கிய விடயங்கள் வரை இந்த கட்டுறைகள் பரம்பிக் காணப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சமுக பாதுகாப்பு, கல்வி மற்றும் டெலிகொம் வரிகள் தொடர்பாக உத்தேசிக்கப்பட்ட மறுசீரமைப்புக்கள் பற்றி இந்த அறிக்கையில் உள்ள மூன்று கட்டுறைகள் புலனாய்வு செய்கின்றன.

**கட்டுறைகள் " பொருளாதாரங்களை பற்றி கூறுதல்"** : www.ips.lk/talkingeconomics

### இலங்கை : பொருளாதார நிலைமை அறிக்கை 2011 ஆண்டு

***தலைப்பு : யுத்தத்தின் பின்னரான வளர்ச்சி : அதனை முழு அளவில் சந்தைப்படுத்தல்.***




உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொருளாதாரச் சூழல் ஆகிய இரண்டு பரப்புக்களின் அபிவிருத்தியில் இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் நிலைத்த தன்மை தொடர்பில் உருவெடுத்து வருகின்ற ஆபத்துக்களை மதிப்பாய்வு செய்வதன் மூலம் இந்த அறிக்கை ஆரம்பமாகின்றது. 2011 ஆம் ஆண்டின் முதல் அரை ஆண்டின் போது 8 சதவீதம் வரையான மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் துரித மீள் எழுச்சியை பெற்றிருக்கின்ற அதே வேளை, சர்வதேச பொருளாதாரச் சூழல் தொடர்ச்சியாக நலிவடைந்து வரும் கண்ணோட்டத்தில் இந்த வளர்சியை தொடர்ந்து பேணிச் செல்வதில் அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. இந்தப் பின்னணியில், மாறுபட்டு வரும் பொருளாதார நிலைமைகளுக்கு சிறப்பாக முகங்கொடுக்கும் வகையில் பெரும்பாக பொருளாதார நிலைத்த தன்மை தொடர்பில் தேவையான அரசிறை, நாணய மற்றும் நாணயமாற்றுக் கொள்கைகளை தக்கவைத்துக் கொள்வது மிக முக்கியமாகும்.

முழு மொத்த வளர்ச்சிச் செயன்முறையின் பரந்த சமுக பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு இலங்கையை நிலைத்த தன்மையின் ஊடாக
ஒருங்கிணைக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சி அனுமதிப்பதுடன் அதன் ஊடாக தற்பொழுது நிலவுகின்ற சமநிலையற்ற தன்மையினையும் சமப்படுத்துவதற்கு உதவி புரிகின்றது. தூய்மையானதும் இன ரீதியான நியமத்தன்மை ஆகியவற்றிலிருந்தான முழு அளவிலான வளர்ச்சி அபிலாசையிற்குப் புறம்பாக, நிலைத்த பொருளாதார வளர்ச்சிக்கு முழு அளவிலான அபிவிருத்தி மிக முக்கியமாகும், வளர்ச்சியை கட்டுப்படுத்தக் கூடிய விடயமாக வினைத்திறனான வளங்களின் கீழ் உழைப்பு காணப்படுகின்றது. அரச சேவை வழங்கலில் சமநிலையற்ற தன்மை மற்றும் இலங்கையில் யுத்தத்தின் பின்னரான சனத்தொகைக் குழுக்களின் வியாபாரச் சூழலை அபிவிருத்தி செய்வது தொடர்பாக துரிதமான வளர்ச்சி எவ்வாறு விபரிக்கின்றது பற்றி இந்த அறிக்கை கவனம் செலுத்துகின்றது.

**இலங்கையில் சந்தைப் பொருளாதார முறைமையின் கீழ் பொருளியல் மற்றும் சமுக அபிவிருத்தி, புத்ததாச ஹேவாவிதாரண, பாராட்டுத் தொகுதி 1**

திருத்தம் செய்தல்: சமன் கெலகம மற்றும் திலெனி குணவர்தன

இந்த இரண்டு தொகுதிகளும் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமுக அபிவிருத்தியினை பரந்த அளவில்




உள்ளடக்குவதுடன் சந்தைப் பொருளாதாரம் பற்றியும் ஆராய்கின்றன. இலங்கையின் சந்தைப் பொருளாதாரத்தின் உண்மை நிலைமையினை இந்த தொகுதிகள் உள்ளடக்குவதுடன், அண்மைய தசாப்த்தின் போது நாடு முகங்கொடுத்த சமுகப் பிரச்சினைகள் மற்றும் பிரதான பொருளாதாரம் தொடர்பான திரண்ட பகுப்பாய்வினையும் பூரணப்படுத்தியுள்ளது. இந்த தனிப்பட்ட தொகுதிகள் அரச நிதி மற்றும் பணம், இறைக் கொள்கை மற்றும் வரி விதிப்பு, மற்றும் பிராந்திய வருமான சமநிலையற்ற தன்மை மற்றும் வருமான பங்கீட்டுடன் தொடர்புடைய பிரச்சினைகள் மற்றும் சமுகத்தின் பகுதிகள் மற்றும் மாறுபட்ட துறைகள் தொடர்பான சந்தைப் பொருளாதாரத்தின் தாக்கம் போன்ற பாரிய பரப்புக்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் ஊடாக பல குறிக்கோள்களை ஆய்வு செய்கின்றது.

http://www.ips.lk/publications/series/economic/econmic_social_develop/economic_social_more.html

## வர்த்தக சுதந்திரமயமாக்கல் மற்றும் தென் ஆசியாவில் வறுமை

திருத்தம் செய்யப்பட்டது: பிரேமா சந்த்ரா அதுகோராள, ஜயதிலக்க எஸ். பண்டார, மற்றும் சமன் கலேகம, 2011 யூலை, ரவுட்லெட் ஆல் வெளியிடப்பட்டது, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமேரிக்க நாடுகள்.




அபிவிருத்தி கொள்கை விவாதத்தில் கலந்துரையாடப்படக் கூடிய மிக முக்கியமானதொரு தலைப்பாக வர்த்தக சுதந்திர மயமாக்கல் மற்றும் வறுமைக்கிடையிலான தொடர்பு என்ற தலைப்பு காணப்படுகின்றது. மேற்படி விடயம் தொடர்பான தற்பொழுதைய ஆய்வுகளில் ஆரம்ப கட்டமாக பல் நாடுகளுக்கிடையேயான பிராந்திய ரீதியான தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், கொள்கை விவாதத்தை வெளிப்படுத்துவதற்கு சிறந்த அனுபவரீதியான அடிப்படையொன்றை வழங்குவதில் இந்த அணுகுமுறையின் வரையறைகள் தொடர்பாக ஆர்வம் காணப்படுகின்றன. எதிர் வரும் காலங்களில் தனிப்பட்ட நாடுகளுடன் ஆழமான பகுப்பாய்வுகளை பொறுப்பேற்பதற்கான தேவை பற்றி இந்த வரையறைகள் குறிப்பிடுகின்றன. வர்த்தக சுதந்திர மயமாக்கல் மற்றும் வறுமைக்கிடையேயான தொடர்பினை பரீட்சிக்கும் நோக்கில், தென் ஆசியாவின் ஏழு நாடுகளான: பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, பாகிஸ்தான் மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் வர்த்தக கொள்கை மறுசீரமைப்புக்கள் மற்றும் வறுமை ஒழிப்புப் பெறுபேறுகள் பற்றிய விடய ஆய்வுகளை இந்த புத்தகம் உள்ளடக்குகின்றது. கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இந்தப் பிராந்தியத்தில் சுதந்திரமயமாக்கல் மறுசீரமைப்புக்கள் தொடர்பாக பரந்த அளவிலான முக்கியத்துவம் வழங்கப்பட்டு அதி உயர் போட்டிதன்மை கற்கைகள் தொடர்பாக தென் ஆசிய பிராந்தியம் கருதப்படுகின்றது. அது மட்டுமற்றி, மறுசீரமைப்பின் கால அவகாசம் மற்றும் மறுசீரமைப்பின் முழுமைத்தன்மையின் பிரகாரம் நாடுகளுக்கிடையேயான முக்கியமான மாற்றங்கள் தொடர்பிலான முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி, மற்றும் இந்தப் பிராந்தியத்தில் உலக வறுமை பற்றி பாரிய கவனம் செலுத்தப்பட்டு ஆய்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. தென் ஆசியா

முழு அளவிலான அபிவிருத்தி என்பது எவ்வாறாயினும், வளர்ச்சியைப் பகிர்தல் பற்றி மாத்திரம் கவனம் செலுத்துவதன்று. வளர்ச்சியை உருவாக்குவதில் அர்த்தபூர்வமான வகையில் மக்களை ஈடுபடுத்தும் வகையில் அவர்களை வலுவூட்டுவதுடன் தொடர்புடையதாகும். மக்களது சுகாதாரம் மற்றும் கல்வி தொடர்பாக முதலீடுகளை மேற்கொள்வதன் ஊடாக அவர்களை வலுவூட்டல் தொடர்புபடுவதுடன் அவர்களுக்கு வினைத்திறனான வளங்கள் தொடர்பாக பிரவேசிப்பதற்கு சமமான வாய்ப்பினை ஏற்பாடு செய்து கொடுத்தல் வேண்டும். ஊழியர் சந்தைக் கேள்விகள் மற்றும் நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளின் தேவைகள் அபிவிருத்தி, குடியியல், தொழில்நுட்ப மற்றும் சந்தை மாற்றங்களுடன் ஒருங்கே தொடர்புபடுகின்றன. இத் துறைகளின் கேள்வி மாற்றங்களை அடைந்து கொள்வதில் இலங்கை முகங்கொடுக்கின்ற கனிசமான சவால்கள் பற்றி இவ் அறிக்கை அடையாளம் காட்டுகின்றது.

துரிதமான வளர்ச்சி நிச்சயம் பாதக நிலைமைகளை பின்தள்ளக் கூடாது. இலங்கையின் பாரிய பங்கினைக் கொண்ட முறைசார வேலைப் படையினர் தற்பொழுதைய வேலைப்படையின் 62 % சதவீதமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் விவசாயம் மற்றும் மின்பிடித் துறை போன்ற குறைந்த உற்பத்தித் திறன்களைக் கொண்ட துறைகளில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கான பொருளாதார வாய்ப்புக்கள் அடைந்து கொள்ளும் பொருட்டு விரிவாக்கப்பட்டதும் சமசந்தர்பம் வழங்கக் கூடியதுமான கொள்கைத் தேர்வுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக இவ் அறிக்கையில் ஆய்வு செய்யப்பட்டு உள்ளன. வறிய முறைசார ஊழியர்கள் முகங்கொடுக்கின்ற இன்னல்கள் மற்றும் சமுக பொருளாதார, அரசியல், மற்றும் பூகோள ரீதியான காரணிகள் மற்றும் தற்பொழுது நிலவுகின்ற சமுகப் பாதுகாப்பு அளவீடுகள் மற்றும் அவர்களுக்கிடையேயான இடைவெளிகள் தொடர்பான மதிப்பீடொன்றை இந்தப் பகுப்பாய்வு உள்ளடக்குகின்றது.

http://www.ips.lk/publications/series/soe/sri_lanka_soe_2011/sri_lanka_soe_2011.html

## பொருளாதாரங்கள் பற்றிக் கூறல் டைஜெஸ்ட் (சனவரி – யூன் 2011)




கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தினால் 2011 ஆம் ஆண்டு சனவரி – யூன் வரையில் ஆராய்சியாளர்களினால் வெளியிடப்பட்ட கட்டுறைகள் அனைத்தையும் இந்த வெளியீடு உள்ளடக்குகின்றது. இந்தக் கட்டுறைகளானது கால நிலை மாற்றம், சூழல் மாற்றங்கள், சுகாதாரம் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு நிதியளிப்பு, வரி விதிப்புக் கொள்கை, சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சி, விவசாயத்தில் புலமைச் சொத்து உரிமைகள், சர்வதேச பொருளாதார தளத்தில் இலங்கை, மதுபானக் கொள்கை, அரசியற் பொருளாதாரம் மற்றும் தனியார் துறை அபிவிருத்தி தொடர்பாக விரிந்து செல்கின்றன.

கட்டுறை “ பொருளாதாரங்கள் பற்றிக் கூறல்” : www.ips.lk/talkingeconomics

மற்றுமல்லாது சர்வதேச வர்த்தகம் மற்றும் அபிவிருத்திப் பொருளாதாரங்கள் தொடர்பிலான ஆய்வுகளுக்கு இந்தப் புத்தகம் பயன் மிக்கதாகும்.

http://www.ips.lk/staff/ed/publications_ed/international/trade_liberalization_poverty/trade_liberaliation_more.html

**குடிபெயர்வு, மாற்றல் கிடைப்பனவுகள் மற்றும் தென் ஆசியாவின் அபிவிருத்தி**
**திருத்தியது: சமன் கெலெகம.**




தென் ஆசியாவின் குடியகல்வு, மாற்றல் கிடைப்பனவுகள் மற்றும் அபிவிருத்தியானது குடியகல்வு பாய்ச்சல்கள் மற்றும் போக்குகள், குடியகல்வு மாற்றல் கிடைப்பனவுகள் மற்றும் குடியகல்வு கொள்கைகள் தொடர்பான பரந்த அளவான தகவல்களை இணைத்து, தென் ஆசிய நாடுகளின் அபிவிருத்தி தொடர்பில் குடியகல்வின் தாக்கங்கள் வெளிக்காட்டப்படுகின்றது. குடிபெயர்பவர்களின் உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் குடிபெயர்வு மேம்பாடு மற்றும் அபிவிருத்தி தொடர்புகள் பற்றிய வினைத்திறனான ஒத்துழைப்புக்கான பல முன்மொழிவுகள் இந்த ஏட்டில் கலந்துரையாடப்படுகின்றது. அபிவிருத்தியை தருவிப்பதில் மாற்றல் கிடைப்பனவுகளின் பாத்திரம், வறுமையிலிருந்து மக்களை விடுவிப்பதற்கு உதவி புரிகின்ற உண்மையினை உறுதிப்படுத்துவதற்கு வழிவகை செய்கின்றது. மாறாக, வறுமை ஒழிப்பு தொடர்பில் மாற்றல் கிடைப்பனவுகளின் தாக்கம் செல்வாக்குச் செலுத்துவதுடன் அதன் விளைவினைத் தீர்மானிக்கின்ற ஏனைய பொருளாதார, சமுக மற்றும் கலாச்சார காரணிகளுடன் இவை ஒருங்கிணைந்து தொழிற்படுகின்றது.

பிரசைகள் கௌரவத்துடனும் சம உரிமையுடனும் வாழக் கூடிய சூழல் ஒன்றை உருவாகக்கல் மற்றும் மானிடத் தேவைத் தெரிவுகளை விரிவுபடுத்துகின்ற இலக்குடன் இணைந்து, வளர்ச்சியியை அமுல்படுத்துகின்ற சாத்தியமான செயன்முறை ஒன்றாக அபிவிருத்தி உணரப்பட வேண்டிய நிலைமையில் அபிவிருத்தித் திட்டமிடலின் பிரதான நீரோட்டத்திற்குள் குடிபெயர்வு எவ்வாறு கொண்டு வரப்படல் வேண்டும் என இந்தப் புத்தகம் ஆய்வு செய்கின்றது.

http://www.ips.lk/staff/ed/publications_ed/international/migration
remittances_development/migration_remittances.html

**தென் ஆசிய பொருளாதார சஞ்சிகை**
**தொகுதி. 11, இல. 1 மற்றும் 2, 2011, மார்ச் மற்றும் ஏப்ரல்**
**திருத்தம் செய்யப்பட்டது : சமன் கெலகம.**






| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல. ஈஎல்/ஏ/ஐபீஎஸ்/<br>My No எப்ஏ/2011 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No. | දිනය<br>திகதி 2012 செப்தெம்பர் 19<br>Date |

தலைவர்,

இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம்

**இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1999 இன் 09 ஆம் இலக்க திருத்தப்பட்ட 1988 இன் 53 ஆம் இலக்க இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.


අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்ட்டன.

(அ) தனியார் வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த (நிலையான வைப்பு இல. 3-048634-130 இன் கீழ்) ரூபா 82,900,000 தொகை நிறுவகத்திற்குச் சொந்தமாக இருந்த போதிலும் அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்தொகை தர்ம நிதியத்திற்குரியதாக இருந்ததாக எனக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அக்கணக்கு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதி நிறுவகத்திற்குச் சொந்தமான 06 நிலையான வைப்புக்களில் பெறவேண்டியிருந்த வட்டிப் பணம் ரூபா 283,599 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 387,052 எனக்

காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 103,453 தொகை அதிகரித்துக் கணக்கு வைக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(இ) நிலையான வைப்புக்காக கிடைக்க வேண்டிய வட்டியை கணக்குகளில் வைக்கின்ற போது நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்பட்டு கணிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டி வருமானம் கணக்குகளில் வெளிப்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்கு மீதிகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற பின்வரும் விடயங்கள் மற்றும் அவற்றிற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 30,852 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் பெறுமதி | உபயோகப் பதிவேடுகளின் பெயர் | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | ரூபா |
| நிலையான வைப்பு மீதி | 11,999,000 | 12,002,154 | மீதி உறுதிப்படுத்தல் கடிதப் பிரகாரம் | 3,154 |
| சேமிப்புக் கணக்கு மீதி | 3,803,798 | 3,791,239 | வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் | 12,559 |
| திறைசேரி உண்டியல் | 95,679,986 | 95,653,749 | பரீட்சைமீதியின் பிரகாரம் | 13,763 |
| பெறவேண்டிய வட்டி | 3,839,901 | 3,838,525 | பரீட்சை மீதியின் பிரகாரம் | 1,376 |
| வேறுபாடுகளின் கூட்டுத் தொகை | | | | 30,852 |

2.2.3 பெறவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஏனைய கிடைக்க வேண்டிய கணக்கு மீதியில் உள்ளடங்கியிருந்த வெளிநாடு சென்ற உத்தியோகத்தர்களினால் மீளளிப்புச் செய்ய வேண்டிய வெளிநாட்டு விமான அனுமதிப் பத்திரக் கட்டணமான ரூபா 851,475 பெறுமதி உள்ளடங்கியிருந்ததுடன் இதில் ரூபா 124,179 தொகை 2008 ஆம் ஆண்டிலிருந்தும், ரூபா 246,800 பெறுமதி 2009 ஆண்டிற்காகவும் ரூபா 259,000 தொகை 2010 ஆம் ஆண்டிற்குரியதாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டன.

(ஆ) 2010 இன் கணக்காண்டிற்காக ரூபா 793,845 தொகை திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய நிதி ஏற்பாடாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 2012 இன் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் அதனை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 ஆம் ஆண்டில் 297 செயற்திட்டங்களுக்காக சர்வதேச ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 97,861 தொகை கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டுவரப்படுகின்ற அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய சம்பளம் ரூபா 101,200 தொகையானது கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் கிடைத்திருக்காததுடன் அதற்காக எடுக்கப்பட்ட செயல்நடவடிக்கைகளும் காணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) தனியார் நிறுவனமொன்றிற்குச் செலுத்த வேண்டிய நிறுத்தி வைக்கப்பட்ட தொகையான ரூபா 4,945,668 மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் மீதிகளின் கீழ் காண்பிக்கப்படாத காரணத்தினால் தேறிய சொத்துக்களின் பெறுமதி அத்தொகையினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்ட விடயங்களில் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 1,311,005 தொகையில் ரூபா 216,172 மீதி 2010 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டுவரப்படுகின்ற தொகையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2536901 ஆம் இலக்க வங்கிக் கணக்கிலுள்ள ரூபா 9,890 தொகையான மீதிக்கான மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில் டொரிங்டனில் அமைந்துள்ள சமுர்த்தி நாற்றுமேடைக் காணியில் ½ ஏக்கர் கொள்கை கற்கைகள் நிறுவகத்திற்கு வழங்கப்பட்டு அதற்கான குத்தகை வாடகையாக ரூபா 5,460,000 தொகை இதுவரையில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக நீண்ட கால குத்தகை உரித்துறுதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் 53 ஆம் இலக்க அதிகாரச்சட்டம் மற்றும் 1999 இன் 09 ஆம் இலக்க கொள்கை கற்கைகள் நிறுவக அதிகாரச் சட்டத்தின் 20(2) ஆம் பிரிவு | நிறுவனத்தின் பதவியணியினர் தற்காலிக அல்லது நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சகல பதவியணியினரும் நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஒப்பந்த அடிப்படையிலேயே நியமிக்கப் பட்டிருந்தனர். |

(ஆ) பொது முயற்சிகள் சுற்றுநிருபம்

---

(i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| 9.2(பீ) ஆம் பிரிவு | ஒவ்வொரு நிறுவகமும் அங்கீகரிக்கப்பட்ட பதவியனியினது ஒழுங்கமைக்கப்பட்ட அட்டவணையொன்றைப் பேண வேண்டியிருந்த போதிலும் நிறுவகத்தினால் அவ்வாறு பேணப்பட்டிருக்கவில்லை. |
| 9.3(1) ஆம் பிரிவு | நிறுவகத்தில் ஆட்சேர்த்தல்கள் மற்றும் பதவிஉயர்வுகள் வழங்குதல் நடைமுறைகளுக்காக அமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினுடைய இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 9.14.2 ஆம் பிரிவு | நிறுவகத்தின் மனிதவள முகாமைத்துவம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட செயன்முறைக் கையேட்டிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| 9.7 மற்றும் 9.8 ஆம் பிரிவுகள் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் இன்றி சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் சனவரி தொடக்கம் திசெம்பர் வரை சம்பளம், படிகள், கொளரவக் கொடுப்பனவுகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் என்பவைகளுக்காக முறையே ரூபா 32,700,274 , ரூபா 1,108,312 , ரூபா |

| | | |
|---|---|---|
| | | 3,757,763 , ரூபா 3,124,766 என ரூபா 40,691,115 கூட்டுத்தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (இ) | **அரசாங்க கணக்குகள் சுற்றுநிருபம்** | |
| | 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பீஎன் 437 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 01 ஆம் பந்தி | வைத்தியக் காப்புறுதி உத்தேசத் திட்டம், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அல்லது இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றை மாத்திரம் கருத்திற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் நிறுவகத்தின் உத்தியோகத்தர்களுக்குரிய வைத்தியக் காப்புறுதி செலிங்கோ காப்புறுதிக் கம்பனியிடமிருந்து பெறப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பிரிவு | (i) ரூபா 51,678,014 தொகையான ஒப்பந்தம் தொடர்பாக (Local area network unified Communication and power solution with infrastructure) அமைச்சுக் கொள்வனவுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) கலையரங்கத்தை நவீனமயப் படுத்தி கலையரங்கத்திற்கான கதிரை களைக் கொள்வனவு செய்வதற்காக முறையே ஏற்பட்ட ரூபா 495,700 மற்றும் ரூபா 2,251,334 தொகைகள் தொடர்பாக முறையான கொள்னவுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்க வில்லை. |

(iii) மேற்கூறப்பட்ட 03 ஒப்பந்தங்கள் தொடர்பாக பகிரங்க கூறுவிலைகள் கோரப்பட்டு ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்தல் தொடர்பாக கொள்வனவுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாடுகளின் விளைவுகள் ரூபா 343,442 மிகையாக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 26,294,271 ஆனமையால் நிதிசார் விளைவில் ரூபா 26,637,713 ஆன அதிகரிப்பினைக் காட்டியது. செயற்திட்ட வருமானம் ரூபா 24,143,028 இனாலும் பெறுமானத் தேய்வு ரூபா 4,769,899 இனாலும் அதிகரித்தமை இதற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

4. செயற்பாட்டு மீளாய்வு

---

4.1 செயலாற்றல்

---

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் 2011 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 16 செயற்திட்டங்கள் மற்றும் 01 செயலமர்வு என்பவற்றைச் செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கை அதன் செயல் முன்னேற்றத்தை இணக்கஞ்செய்வதற்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊழியர் நலன்புரிச் செயற்பாடுகளுக்கான நிதியமொன்று 08 வருடங்களுக்கு முன் உருவாக்கப்பட்டு கொடுக்கல் வாங்கல்களைச் செய்திருந்த போதிலும் இது வரையில் உத்தியோகத்தர்களின் தேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிராததுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அம் மீதி ரூபா 1,176,955 ஆக இருந்ததுடன் அப் பணம் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2006 மே 30 ஆந் திகதி நெதர்லாந்து அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட உதவி உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கைக் காலம் 2008 திசெம்பர் மாதத்தில் பூர்த்தியடைய வேண்டிய போதிலும் குறிப்பிட்ட காலப்பகுதியில் கட்டிட நிர்மாணிப்பு செயற்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்த காரணத்தினால் உடன்படிக்கைகள் காலம் 2010 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 ஆகஸ்ட் மாதம் வரை இந்த நிதியத்திலிருந்து நிர்மாணச் செயற்பாடுகளுக்காக பணம் செலவிடப்பட்டிருந்தன. 2011 ஆகஸ்ட் வரை எச்எஸ்பீசீ யூரோ கணக்கு மூடப்பட்டிருந்த காரணத்தினால் இலங்கைக் காசுக்கு சமமான வகையில் 2010 மற்றும் 2011 ஆண்டுகளுக்குரித்தாக கீழே குறிப்பிடப்பட்டவாறு ரூபா 7,833,583 தொகையான நாணயமாற்று பாதகமாக ஏற்பட்டிருந்தது.

| திகதி | விபரம் | தொகை |
| --- | --- | --- |
| | | ரூபா |
| 2010.12.31 | நாணயமாற்று பாதகம் | 4,883,138 |
| 2011.09.28 | நாணயமாற்று பாதகம் | 2,348,122 |
| 2011.09.30 | கட்டிட நிதியத்தின் நிலையான வைப்பின் நட்டம் | 2,952,012 |
| 2011.01.01 | நாணயமாற்று சாதகம் | (2,349,689) |
| | | 7,833,583 |

(இ) செயற்திட்டம் பூர்த்திசெய்த செலவினங்கள் வருமானங்கள் என்பன இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்படும் போது ஏற்படுகின்ற தாமதத்தின் காரணமாக ஏற்பட்ட நாணய பரிமாற்று நட்டம் ரூபா 237,537 ஆக இருந்தது.

### 4.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

(அ) கொள்கை கற்கைகள் நிறுவகத்திற்காக புதிய கட்டிட நிர்மாண பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகளில் முக்கியமான குறைபாடுகளின் பொழிப்பொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) நிறுவகத்திற்கும் நெதர்லாந்து அரசாங்கத்திற்கும் இடையே 2006 மே 30 ஆந் திகதி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கைக் காலம் 2008 திசெம்பர் இல் பூர்த்தி செய்ய வேண்டியிருந்ததுடன் 2010 ஆகஸ்ட் மாதத்தின் போதே இது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ii) சரியான அளவிடைகளைப் பெற்றுக்கொள்ளாமை, விலை மாற்றங்களுக்கான ஒப்பந்தக் கொடுப்பனவு, கட்டிடத்திற்கு

அருகில் நிர்மாணிக்கப்பட்ட தடாகத்திற்கான முறையற்ற கொடுப்பனவு, அளவிடைப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட விலை அளவினை விட அதிகரித்த பெறுமதியில் கொங்கிரீட்களுக்கான கொடுப்பனவு போன்ற விடயங்களுக்காக ரூபா 6,184,914 தொகையானது மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) அளவிடைப் பத்திரத்தின் விடயம் 7.1.10 இற்காக (in flower through in pond No. 2) ரூபா 33,000 தொகையான மேலதிகக் கொடுப்பனவு வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக ரூபா 376,750 தொகை செலுத்தப்பட்டிருந்ததாக ஆலோசனைக் கம்பனி அறிக்கையிட்டிருந்தது.

(iv) கட்டிட நிர்மாண ஒப்பந்தம் குறிப்பிட்ட காலத்தில் பூர்த்தியடையாமையினால் ரூபா 5,885,281 தொகையான நாணயமாற்று நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(v) 2011 ஏப்ரல் 20 வரையில் கட்டிட நிர்மாண ஒப்பந்தத்தில் ரூபா 1,852,607 பெறுமதியான 07 வேலைப் பகுதிகள் பூர்த்தி செய்யப்படாமல் பூரணமற்றுக் காணப்பட்டது.

(vi) மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 5,669,449 தொகைக்கு தண்ட வட்டி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vii) வழங்கப்பட வேண்டிய முற்பணத் தொகையினை விஞ்சி 43% ஆன முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(viii) ஒப்பந்தப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக நிறுவகத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 13 மில்லியனுக்காக 170 நாட்களுக்கு வட்டிப்பணமும், செய்யப்படாத வேலைகள் தொடர்பாக 20% தொகையும் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) திட்டத்தின் பிரகாரம் சுவர் கொங்கிரீட்டினால் பூர்த்தி செய்யப்படுவதற்குப் பதிலாக செங்கற்களினால் சுவர் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் எதிர்பார்த்த வடிவமைப்பினை அடைய முடியாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய ரூபா 126,242,254 தொகையான வேலையினைச் செய்வதற்காக 33 உப ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தத் தொகையில் 5% இற்கு குறையாத பெறுமதிக்காக செயலாற்றல் காப்புறுதியொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்தக் கிரயம் |
|---|---|
| | ரூபா |
| காபட் டைல் | 4,830,872 |
| அலுமினியத்தினால் கூறுகளாக்கல் | 5,704,871 |

(ii) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தத் தொகையில் 20% ஆன அதிகூடிய முற்பணம் செலுத்த முடியுமாயிருந்த போதிலும் அவ் எல்லையினை விஞ்சி ரூபா 5,427,402 தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தன.

| ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்தப் பெறுமதி | செலுத்தப்பட்ட முற்பணம் | 20% இற்கு மேற்பட்ட தொகை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| காபட் டைல் | 4,830,872 | 2,829,510 | 1,863,336 |
| அலுமினியத்தினால் கூறுகளாக்கல் | 5,704,871 | 4,322,157 | 3,181,183 |
| தீ பாதுகாப்பு மற்றும் தடுப்பு முறைமைகள் | 2,079,660 | 798,820 | 382,883 |
| மொத்தம் | | | 5,427,402 |

(iii) கீழே குறிப்பிடப்படும் ரூபா 12,615,403 பெறுமதியான 3 உப ஒப்பந்தங்கள் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் பிரகாரமான உடன்படிக்கைகளுக்கு உடன்படாமை.

| ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்தப் பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| காபட் டைல் | 4,830,872 |
| அலுமினியத்தினால் கூறுகளாக்கல் | 5,704,871 |
| தீ பாதுகாப்பு மற்றும் தடுப்பு முறைமைகள் | 2,079,660 |
| மொத்தம் | 12,615,403 |

4.4 **பதவியணியினர்**

நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட அட்டவணையில் பேணப்படாதிருந்ததுடன் கணக்காய்விற்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் 2011 நவம்பர் 22 ஆந் திகதியில் உள்ளவாறு நிறுவகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பதவியணியினர் 49 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

5. **கணக்களிப்பும் நல் ஆளுகையும்**

5.1 **உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5.2 **பணிப்பாளர் சபைக் கூட்டத் தீர்மானம் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள்**

மீளாய்வாண்டின் போது 02 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அக்கூட்ட அறிக்கையின் தீர்மான அமுல்படுத்தல்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) **2011 மார்ச் 18 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்ட அறிக்கையின் 50.1 ஆம் பிரிவு**

கொள்கை கற்கைகள் நிறுவகம் வெளிநாட்டு உதவியின் அடிப்படையிலான செயற்திட்ட நடவடிக்கைகளின் அதிக சதவீதத்திலான செயற்பாட்டுச் செலவினங்கள் வெளிநாட்டு உதவி மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானங்களினால் செயற்படுகின்ற நிறுவனமானதால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்ட அரசாங்க நிதிப் பிரமாணங்கள், தாபன விதிக் கோவை மற்றும் பொதுத் திறைசேரிச் சுற்றறிக்கைகள் என்பவைகளுக்கு முரணாக செயற்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டு நிறுவகத்திற்கு பாரிய பிரச்சினைகள் மற்றும் இடையூறுகள் இருந்தமை பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தமை அப் பணிப்பாளர் சபைக் கூட்ட

அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2011 யூலை 13 கூட்டத்தின் போதும் இவ்விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு பின்வரும் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(i) சுதந்திரமான நிறுவனமாக செயற்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்

(ii) 1999 இன் திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தை வறிதாக்குதல்

(iii) இலாபமற்ற கம்பனியாக செயற்படுதல்

மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அரசாங்க நிதிப்பிரமாணங்கள், தாபன விதிக்கோவைப் பிரமாணங்கள் மற்றும் ஏனைய சுற்றுநிருபங்களுக்கு முரணாக செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பெறவேண்டிய தொகை

(ஆ) பதிவேடுகளைப் பராமரித்தல்

(இ) ஒப்பந்தங்களை வழங்குதலும் கட்டுப்படுத்தலும்

ஒப்பம்: எச்.ஏ.எஸ்.சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## கணக்காய்வு அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பதில்.

குறிப்பு எண் : **EL/A//IPS/FA/ 2011**

### 2.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

**அ.** ரூபா 82,900,000 ஆகிய HSBC வங்கியிலான நிலையான முதலீடு, இலங்கை கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனத்தோடு தொடர்பானதல்ல. இது அறக்கொடை நிதியின் கீழ் பெறப்பட்ட ஒரு வைப்பாகும். இது குறித்து கணக்காய்வின் போது கணக்காய்வுக் குழுவுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

**ஆ.** வட்டிப் பெறுகைகள் சரியாகவே கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. வங்கியானது 2012 ம் ஆண்டுக்கான வட்டி உள்ளிட்ட மீதியை உறுதிப்படுத்தும் போது பிழையாகவே அதனை உறுதிப்படுத்தியிருந்தது.

**இ.** நிறுத்தி வைக்கப்பட்ட வரிக்கான தேறிய வட்டி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே நிறுத்தி வைக்கப்பட்ட வரியானது குறைக்கப்பட்டு கணக்குகளில் வட்டியை சரியாகப் பதிவு செய்யும் பொருட்டு சரியான வட்டி காட்டப்பட்டுள்ளது.

### 2.2.2. இணக்கம் காணப்படாத கணக்கு மீதிகள்

அழைப்பு வைப்புக்களுக்கான ரூ. 3154 வட்டியானது காலக்கணிப்பீட்டோடு தொடர்பான ஒரு விடயமாகும். அதனை சட ரீதியானதாகக் கருத முடியாது. இவ்வாறான நிலைமை ஏற்படக் காரணம் கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனம் நாட்களை கைக்கணக்கு முறையில் கணிக்கும் போது வங்கியானது அதனை தன்னியக்க ரீதியில் கணிக்கின்றமையாகும்.

012-139630-040 இலக்கத்தை உடைய HSBC கணக்கின் வங்கி அறிக்கை மீதியானது HSBC வங்கியின் வங்கி இணக்கக் கூற்றை தயாரிப்பதற்கு சரியாகவே பயன்படுத்தப்பட்டது. எனவே அங்கு முரண்பாடுகள் எதுவும் இல்லை.

திறைசேரி உண்டியல்கள் மற்றும் பெறுகைக் கணக்குகளுக்கான வட்டிகள் ஆகியவற்றின் மீதான மீதிகள் சரியானவையாகும். அங்கு முரண்பாடுகள் எதுவும் இல்லை.

| | |
|---|---|
| திறைசேரி உண்டியல் கணக்கு மீதி | பற்று ரூ. 95,693,748.74 |
| குறைக்க : திறைசேரி உண்டியல் தவணைக் கணக்கு | வரவு ரூ. 13,763 |
| கணக்குகள் மற்றும் பட்டியல் பெறுமானத்தின் படி மொத்தத் | |
| திறைசேரி உண்டியல் | ரூ. 95,679,986 |
| வட்டி பெறுகைக் கணக்கு | பற்று ரூ. 3,838,524.67 |
| சேர்க்க : ஒன்று சேர்ந்த வட்டி இலாபம் | பற்று ரூ. 1,376.20 |
| கணக்குகளின் படி மொத்த வட்டிப் பெறுகை | பற்று ரூ. 3,839,901 |

### 2.2.3 கணக்குப் பெறுகைகளும் செலுத்துகைகளும்

**அ.** பிரயாணம் இடம் பெற்று ஒன்று அல்லது இரண்டு மாதங்களின் பின் விமான டிக்கட் மீளளிப்புக்கள் பெறப்பட்டு நிவர்த்திக்கப்பட்டு விட்டன. இருப்பினும் தொகைகள் உடனடியாக பெறப்படாத சந்தர்ப்பங்களில் நிதிகளைப் பெற்றுக் கொள்வதில் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. பெறவேண்டியுள்ள தொகைகளை பெற்றுக் கொள்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், நீண்ட காலமாக பெற வேண்டியுள்ள தொகைகள் கணக்காய்வும் சுட்டிக்காட்டியுள்ள படி ரத்துச் செய்யப்பட முடியும். இது 2012ல் செய்யப்படும்.

### 2.2.4. கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

**அ.** அனைத்து வங்கிகளிடமிருந்தும் உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டன. 2536901 என்ற இலக்கத்தை உடைய கணக்கின் மீதியான ரூ. 9,890 தொடர்பாக மக்கள் வங்கி பதிலனுப்பவில்லை. இவ்வுறுதிப்படுத்தலானது மார்ச் 31ம் திகதியே பெற்றுக் கொள்ளப்பட்டது. அது தற்போது கோவையில் உள்ளது.

**ஆ.** காணி தொடர்பான நீண்ட கால குத்தகை ஒப்பந்தம் இன்று வரை பெறப்படவில்லை.

### 2.2.5. சட்டங்கள், விதிகள், விதிமுறைகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களோடு இணங்கிச் செல்லாமை.

**அ. நிதியீட்டத்தின் தன்மை காரணமாக (செயற்திட்ட நிதிகளில் தங்கியிருத்தல்)** பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்படுவர்.

**ஆ.** கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனமானது இலங்கை அரசின் ஸ்தாபனக் கோவை மற்றும் நிதிச் சட்டங்களின் கீழ் வரமாட்டாது. 1988 ஆம் ஆண்டின் 53ம் இலக்க இலங்கை கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவன சட்டத்தின் பிரிவு 6 (அ), இலங்கை கொள்கை ஆய்வு நிறுவனத்தின் ஆளுனர் சபைக்கும் முகாமைத்துவத்துக்கும் தனது சொந்த சட்டங்களையும் விதிமுறைகளையும் ஆக்கிக் கொள்வதற்கான முழுமையான அதிகாரத்தை வழங்குகிறது. அதற்கிணங்க இலங்கை கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் செயற்பாட்டொழுங்கை ஆள்வதற்கான இயங்குகை ஒழுங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதனால் பணியாளர் எண்ணிக்கை சேவைக்கமர்த்துகைகள், பதவி உயர்வுகள் மற்றும் சம்பளம் உள்ளிட்ட கொடுப்பனவுகள் இவ் இயங்குகை ஒழுங்குக்கேற்ப அமைகிறது. அத்தோடு அது திறைசேரியின் அனுமதிக்காக அனுப்பப்படுவதுமில்லை. அத்தோடு திறைசேரியின் செயலாளர் இந்நிறுவனத்தின் ஆளுனர் சபை அங்கத்தவர் என்பதும் கவனத்திற் கொள்ளப்படவேண்டியதாகும்.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் பணிப்பாளரான திரு. ஸீ.எஸ். பெரேரா என்பவருக்கு ஆளுனர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட இவ்வியங்குகை ஒழுங்கு 2010 நவம்பர் 12 ம் திகதி அனுப்பிவைக்கப்பட்டது. இன்று வரை அதற்கு எப்பதிலும் கிடைக்கவில்லை.

**இ.** 2003 ம் ஆண்டிலிருந்து பெறப்பட்ட மருத்துவக் காப்புறுதியானது வருடா வருடம் புதுப்பிக்கப்பட்டதற்கான காரணம் செலிங்கோ காப்புறுதி நிறுவனமானது அதி உன்னத வாடிக்கையாளர் சேவைகளை சிறு அளவிலான தவணைக் கட்டண அதிகரிப்புடனும் காப்புறுதித் திட்டத்துக்கான மேம்படுத்தல்களுடனும் வழங்கியமையாகும். இலங்கை காப்புறுதிக் கம்பனியின் தவணைக் கட்டணமானது செலிங்கோ காப்புறுதிக் கம்பனியின் தவணைக் கட்டணத்தை விட மிக அதிகம் என கண்டறியப்பட்டது. விலைமனுக்கல் கோரப்பட்ட போது இலங்கை காப்புறுதிக் கம்பனியால் எமக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் செலிங்கோ காப்புறுதிக் கம்பனி தர முன் வந்த நன்மைகளையும் தவணைக் கட்டணத்தையும் தம்மால் தரமுடியாது என குறிப்பிடப்பட்டிருந்தது. கணக்காய்வுக்கு இக்கடிதம் முன்வைக்கப்பட்டது. எனவே கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனமானது சுய நிதியீட்டத்தில் தங்கியிருப்பதோடு அவ்வாறான கொடுப்பனவுகளுக்காக அரச உதவி கிடைக்காத காரணத்தினாலும் சுகாதார மருத்துவ காப்புறுதியை இலங்கை காப்புறுதிக் கம்பனிக்கு மாற்றுவது சாத்தியமானதல்ல.

**ஈ.** ரூ. 51,678,014 ஆகிய செலவினத்திற்காக ஜனாதிபதி செயலகத்தால் அனுமதி பெறப்பட்டது. அது தொடர்பான கடிதம் கணக்காய்வின் போது காண்பிக்கப்பட்டது.

கட்டிடங்கள் தொடர்பான செயற்பாட்டுக் குழுவின் பரிந்துரையின் பேரிலேயே கேட்போர் கூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

அனைத்துப் பொருள் கொள்வனவுக்கும் மூன்று விலை மனுக்கள் கோரப்பட்டன. அவை தேவைகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதோடு நிறைவேற்றுப் பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவினாலேயே அப்பணி மேற்கொள்ளப்பட்டது.

**ஆ.** அரசாங்க மானியமான ரூ. 793,845 கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனத்துக்கு 2010ல் செலுத்தப்படவில்லை. இத்தொகை திறைசேரியால் வழங்கப்படமாட்டாது என்பதை நிதிப்பிரிவு அறிந்து கொண்டதன் பேரில், 2011ம் ஆண்டின் ஆரம்பப் பகுதிகளில் அதனை ரத்துச் செய்வதற்காக நிறைவேற்றுப் பணிப்பாளரின் அனுமதி கோரப்பட்டது. இருப்பினும், திறைசேரியானது அந்நிதியை விடுவிக்கலாம் என்ற புரிதலின் பேரில் இது அனுமதிக்கப்படவில்லை. கணக்காய்வு இதனை சுட்டிக் காட்டியுள்ள நிலையிலும் கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனம் அந்நிதியை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இனியும் இல்லாத காரணத்தாலும் நிறைவேற்றுப் பணிப்பாளரின் அனுமதியுடன் 2012 ல் இத்தொகை ரத்துச் செய்யப்படும்.

**இ.** செயற்திட்ட இலக்கம் 297 க்கான சர்வதேச ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து வரவேண்டியுள்ள ரூ. 97,861 ஆகிய தொகையை பெற்றுக் கொள்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்தொகையானது பெற்றுக் கொள்ளப்படாமல் 2009 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக உள்ளதால் 2012 ல் அத்தொகை ரத்துச் செய்யப்பட முடியும்.

**ஈ.** ரூ. 101,200 என்ற தொகையானது, கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனத்திலிருந்து திறைசேரிக்கு முன்மொழியப்பட்ட இரண்டு ஆய்வாளர்களின் சேவைக்கான பழைய நிலுவையாக திறைசேரியிலிருந்து பெறப்பட வேண்டியுள்ள தொகையாகும். இந்நிலுவையின் ஒரு பகுதி பெறப்பட்டு நிவர்த்திக்கப்பட்டுள்ளது. இருப்பினும், கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனம் மற்றும் திறைசேரி ஆகிய இரு நிறுவனங்களதும் கண்ணோட்டத்தில் ஆவண வேலைகள் பாக்கியிருப்பதால் இத்தொகையானது நிலுவையாக உள்ளது. இத்தொகை 2012 ல் ரத்துச் செய்யப்பட முடியும்.

**உ.** கட்டட ஒப்பந்தக்காரரான கே.டீ. ஈபேர்ட் என்பவருக்கு செலுத்தப்படவேண்டியுள்ள ரூ. 4,945,668 ஆகிய வைத்துக்கொள்ளப்பட்டுள்ள பணமானது 2011 டிசம்பர் 31ம் திகதியுடன் நிறைவுற்ற வருடத்துக்கான கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை. கேள்விக்குரிய இத்தொகையானது , குறைபாடுகளின் நீண்ட பட்டியலொன்றின் காரணமாகவும் அதனோடு இணைந்த குறைப்புக்களின் காரணமாகவும் செலுத்தப்படமாட்டாது என்ற புரிதல் காணப்பட்டமையால் அது கணக்கில் காட்டப்படவில்லை. தேவையேற்படின் இதனை கணக்குகளில் காட்டமுடியும். இருப்பினும் குறைபாடுகள் இன்னும் நிலுவையாக உள்ளன. மேலும் இக்கொடுப்பனவு செலுத்தப்படவும் மாட்டாது.

**ஊ.** வருட முடிவின் போது நிறைவு செய்யப்படாத செயற்திட்டங்கள் முன்கொண்டு செல்லப்பட்டுள்ளன. வேலைகள் முழுமையாகாத காரணத்தால் இத்திட்டங்களுக்கான வருமானத்தை அங்கீகரிக்க முடியாது. அதனால் பயன்படுத்தப்படாத தொகைகள் பிற்படுத்தப்பட்ட வருமானமாக காட்டப்பட்டுள்ளன.

ரூ. 1,311,005 ஆகிய வர்த்தக கடன் பெறுநர்களிடமிருந்தான பெறுகைகளில் பின்வரும் பெறுகை மாத்திரமே நிலுவையாக உள்ளது. என்றாலும் அதனை பெற்றுக் கொள்வதற்கான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| செயற்திட்டம் (இல) | விபரம் | கொடையாளர் | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1. 248A | MDG நாட்டு அறிக்கை<br><br>அறிக்கையை மேலதிகமாக பதிப்பித்தல் | நிதியமைச்சு | 216,712 |
| 2. PJ 007F | இந்திய / இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பற்றிய கைநூல் | இந்திய உயர் ஸ்தானிகராலயம் | 403,760 |

**3. நிதி ஆய்வு**

**3.1. நிதிப் பெறுபேறுகள்**

2011 ஆம் ஆண்டில் ரூ. 343,442 மிகை பதிவானது.

**4. இயங்குகை ஆய்வு**

**4.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

**அ.** பணியாளர் நலன்புரி முதலீடானது தேவைப்பட்ட போது பயன்படுத்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் தேவைகள் எழாத காரணத்தால் அது பயன்படுத்தப்படவில்லை. அதற்கு பிரதான காரணம் பணியாளர் நலன்புரிச் செலவினங்களுக்காக IDRC TTI முன்னெடுப்பிலிருந்து நீண்ட கால கொடைகள் பெற்றுக் கொள்ளப்பட்டமையாகும். அதனால் (பயிற்சிகள் உள்ளிட்ட) நலன்புரித் தேவைகள் மேற்படி வரவு செலவுத் திட்ட நிரலின் கீழ் நிவர்த்திக்கப்பட்டது.

**ஆ.** கட்டிட செயற்திட்டங்கள் மீதான அந்நியச் செலாவணி இழப்பு பதிவு செய்யப்பட்டமைக்கான பிரதான காரணம் ஒப்பந்தக்காரரால் கட்டிடச் செயற் திட்டம் தாமதப் படுத்தப்பட்டமையாகும்.

**4.3 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

மேற்படி விடயம் தொடர்பான ஆலோசகரது விளக்க அறிக்கை கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவன அலுவலகத்தில் காணப்படுகிறது. மேலும் அது கணக்காய்வாளர்களுக்கும் காண்பிக்கப்பட்டது.

**5. வகை கூறலும் நல்லாட்சியும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

ஓர் உள்ளக கணக்காய்வுப் பகுதி தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழுவின் கோரிக்கைகளின் படி காலாண்டுக்கான ஒரு கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**5.2 பணிப்பாளர் சபையின் தீர்மானங்கள் மீதான பின்னூட்டல் நடவடிக்கைகள்**

பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் சாதாரணமாக வருடத்துக்கு இரு முறையே இடம் பெறுகின்றன. இருப்பினும் , ஆளுனர் சபையின் அங்கீகாரத்தை வேண்டி நிற்கின்ற விடயங்கள் எதுவுமின்றி வருடத்துக்கான கூடுதல் சந்திப்புக்களை நடத்துவது சாத்தியமில்லை. அத்தோடு கூட்டத்துக்கான அதிகுறைந்த எண்ணிக்கையைப் பெற்றுக் கொள்வதும் பெரும்பாலும் இயலாததாகும்.

ஆளுனர் சபை தீர்மானங்களிலிருந்து எதிர்கால விடயங்கள் தீர்மானிக்கப்படவுள்ளன. அதாவது :

**அ.** கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனத்தை தனித்து இயங்கக் கூடியதாக ஆக்குவது குறித்த ஆளுனர் சபை கலந்துரையாடல்களின் பெறுபேறு.

**ஆ.** கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவன சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட 1999 ஆம் ஆண்டின் திருத்தத்தை நீக்குதல்.

**இ.** கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனத்தை இலாப நோக்கற்ற கம்பனியாக ஆக்குவது குறித்து கணக்காய்வுக்கு காண்பிக்காததற்கான காரணம், அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமையேயாகும். அவ்வகையில் ஆளுனர் சபையானது இது குறித்து கலந்துரையாடி மாத்திரமேயுள்ளது. மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் இன்று வரை எடுக்கப்படவில்லை.

**கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனம் - இலங்கை**

**நிதி முன்னேற்ற அறிக்கை**

| *டிசம்பர் 31 ம் திகதியுடன் முடிவுற்ற வருடத்துக்கானது* | | 2011 | 2010 |
|---|---|---|---|
| | குறிப்பு | ரூ. | ரூ. |
| **வருமானம்** | | | |
| இலங்கை அரசின் பங்களிப்பு | 2 | **12,701,000** | 10,793,845 |
| அரக்கட்டளை நிதியிலிருந்தான பங்களிப்பு | | **7,500,000** | - |
| செயற்திட்ட வருமானம் | 3 | **54,160,812** | 30,017,784 |
| கருத்தரங்குகள் ∴ செயலமர்வுகள் மூலமான வருமானம் | 4 | **3,996,181** | 7,100,539 |
| வட்டி வருமானம் | | **14,569,419** | 17,775,479 |
| கட்டிடங்களுக்கான தவணை முறைக் கடன் கழிப்பிலிருந்தான வருமானம் | | **6,274,023** | 1,504,124 |
| கேட்போர்கூட வாடகை மூலமான வருமானம் | | **222,140** | - |
| நானாவித வருமானம | 5 | **1,774,036** | 1,251,942 |
| **மொத்த வருமானம்** | | **101,197,612** | 68,443,714 |
| | | | |
| **செலவுகள்** | | | |
| | | | |
| ஊழியச் செலவு | 6 | **46,371,858** | 40,651,046 |
| சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு | 13 | **16,521,793** | 5,722,590 |
| ஆராய்ச்சிச் செலவு | 7 | **13,289,655** | 11,755,459 |
| கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகளுக்கான செலவு | | **1,425,719** | 6,148,813 |
| பயன்களுக்கான செலவுகள் | | **15,450,470** | 19,913,582 |
| பிரயாணச் செலவுகள் | | **1,212,923** | 1,926,865 |
| வேறு இயங்கு செலவுகள் | 8 | **3,485,215** | 5,755,210 |
| கேட்போர்கூட வாடகை | | **75,677** | - |
| நாணயமாற்று இழப்பு | | **3,020,860** | 2,864,421 |
| **மொத்தச் செலவுகள்** | | **100,854,170** | 94,737,985 |
| | | | |
| **வரிக்கு முந்திய மிகை ∴ (பற்றாக்குறை)** | | **343,442** | (26,294,271) |
| | | | |
| வருமான வரிச் செலவு | 9 | 0 | - |
| | | | |
| **குறித்த காலத்துக்கான மிகை / (பற்றாக்குறை)** | | **343,442** | (26,294,271) |

## கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனம் - இலங்கை
## நிதி நிலைமை பற்றிய அறிக்கை

| *டிசம்பர் 31 ம் திகதியில் உள்ளவாறு* | குறிப்பு | 2011<br>ரு. | 2010<br>ரு. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசு இணை | 10 | **18,064,518** | 12,938,296 |
| வர்த்தகப் பெறுகைகள் | | **1,311,005** | 2,787,936 |
| இருப்புக்கள் பதிவு - வெளியீடுகள் | | **1,535,187** | 1,520,329 |
| வைப்புக்களும் முன்கொடுப்பனவுகளும் | 11 | **2,240,133** | 2,892,874 |
| வட்டிப் பெறுகைகள் | | **3,839,901** | 1,228,147 |
| பெறுமானம் சேர் வரிப் பெறுகைகள் | | **710,098** | 0 |
| வேறு பெறுகைகள் | 12 | **4,085,528** | 8,959,780 |
| **மொத்த நடைமுறைச் சொ்த்துக்கள்** | | **31,786,369** | 30,327,362 |
| **நடைமுறை சாரா சொத்துக்கள்** | | | |
| சொத்து, பொறித் தொகுதி மற்றும உபகரணங்கள் | 13 | **360,016,948** | 340,926,955 |
| முதலீடுகள் | 14 | **188,586,304** | 218,468,324 |
| **மொத்த நிலையான சொத்துக்கள்** | | **548,603,252** | 559,395,279 |
| **மொத்தச் சொத்துகக்ள** | | **580,389,621** | 589,722,640 |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தல்கள் | 15 | **13,389,653** | 8,934,622 |
| செயற்திட்டங்களுக்கான முன்பெறுகைகள் | 16 | **17,091,061** | 26,679,276 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **30,480,713** | 35,613,898 |
| **நடைமுறை சாரா பொறுப்புக்கள்** | | | |
| ஊழியர் நலன்கள் | 17 | **9,027,633** | 7,478,652 |
| பணியாளர் நலன்புரி நிதியம் | | **1,164,402** | 982,636 |
| பிற்போடப்பட்ட வருமான - மூலதனக் கொடைகள் | 18 | **305,858,626** | 312,132,649 |
| **மொத்த நடைமுறை சாரா பொறுப்புக்கள்** | | **316,050,660** | 320,593,937 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **346,531,374** | 356,207,834 |
| **தேறிய சொத்துக்கள்** | | **233,858,248** | 233,514,806 |
| **தேறிய சொத்துக்கள் ∴ உரிமைப் பங்கு** | | | |
| திரட்டிய மிகை மூலமான மூலதனப் பங்களிப்பு | | **231,714,104** | **231,370,662** |
| அரசு / கொடையாளிகளிடமிருந்தான ஆரம்பச் சொத்து மாற்றுகை | | **2,144,144** | **2,144,144** |
| | | **233,858,248** | **233,514,806** |

நிதி அறிக்கைகளுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்புக்கள் இந்நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைக்கப்பட்ட பகுதிகளாகும்.

இந்நிதி அறிக்கைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் இயைபாக தயாரிக்கப்பட்டுள்ளன.

…………………………….. …………………………….

பிரதம நிதி அலுவலர் நிறைவேற்றுப் பணிப்பாளர்

இந்நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் முன்வைப்பதற்கும் நிறுவனத்தின் ஆளுனர் சபை பொறுப்பாகும்

ஆளுனர் சபைக்காகவும் அது சார்பிலும் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது

………………………………

(ஆளுனர்)

28 பெப்ரவரி 2012

கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனம் - இலங்கை

உரிமைப் பங்கிலான மாற்றம் குறித்த அறிக்கை

*2012 டிசம்பர் 31 ம் திகதியுடன் முடிவுற்ற வருடத்துக்கானது*

| | சொத்துக்கள் | மிகை ∴ (பற்றாக்குறை) | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| **2010 ஜனவரி 01 ம் திகதியிலான மீதி** | 2,144,144 | 231,370,662 | 233,514,806 |
| இவ்வருடத்திலான மிகை வருமானம் | - | 343,442 | 343,442 |
| **2011 டிசம்பர் 31 ம் திகதியிலான மீதி** | **2,144,144** | **231,714,104** | **233,858,249** |

| | | |
|---|---|---|
| **கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனம் - இலங்கை** | | |
| **காசுப் பாய்ச்சல் அறிக்கை** | | |
| **2012 டிசம்பர் 31 ம் திகதியுடன் முடிவுற்ற வருடத்துக்கானது** | 2011 | 2010 |
| | ரூ. | ரூ. |
| **இயங்கு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| வரிக்கு முந்திய மிகை ∴ (பற்றாக்குறை) | **343,442** | (26,294,271) |
| **சீராக்கல்கள்** | | |
| பணியாளர் நலன்புரி நிதியத்திலிருந்தான பங்களிப்பு | 181,766 | 79,954 |
| சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரண பெறுமானத் தேய்வு | 16,521,793 | 5,722,590 |
| கட்டிடங்களுக்கான தவணை முறைக் கடன் கழிப்பிலிருந்தான வருமானம் | (6,274,023) | (1,504,124) |
| பணிக்கொடை முன்னேற்பாடு | 2,117,104 | 3,363,362 |
| வட்டி வருமானம் | (14,569,419) | (17,775,479) |
| நிலையான சொத்துக்களின் அகற்றுகை மீதான பெறுகை ∴ (இழப்பு) | (860,000) | (520,873) |
| **தேறிய காசு உட்பாய்ச்சல் ∴ (வெளிப்பாய்ச்சல்) செயற்பாட்டு மூலதன மாற்றத்துக்கு முன்னர்** | (2,539,337) | (36,928,841) |
| வர்த்த ரீதியான பெறுகைகளினான குறைவுகள் | 1,476,931 | 2,240,822 |
| இருப்புப் பதிவுகளிலான (அதிகரிப்பு) ∴ குறைவு | (14,858) | 247,545 |
| வைப்புக்களிலும் முன்கொடுப்பனவுகளிலுமான குறைவு | 652,741 | 5,133,490 |
| பெறுமானம் சேர் வரி மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளினான (அதிகரிப்பு) ∴ குறைவு | 4,164,141 | (2,425,983) |
| முற்பணப் பெறுகைகளிலான அதிகரிப்பு ∴ (குறைவு) | (9,588,215) | 14,527,587 |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தத் தக்கவைகளிலான அதிகரிப்பு ∴ (குறைவு) | 4,455,031 | 4,795,021 |
| **செயற்பாடுகளினால் தூண்டப்பட்ட தேறிய காசு உட்பாய்ச்சல் ∴ (வெளிப்பாய்ச்சல்)** | (1,393,567) | (12,410,359) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (568,123) | (412,300) |
| **இயங்குகை நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல் ∴ (வெளிப்பாய்ச்சல்)** | (1,961,690) | (12,822,659) |
| **முதலீட்டு நடவடிக்கைகளின் மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| **சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணக் கொள்வனவு** | (44,925,938) | (117,742,105) |
| **நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலைகளிலான (அதிகரிப்பு)∴குறைவு** | 9,314,164 | |
| பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி | 11,957,665 | 25,450,700 |
| சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரண அகற்றுகை மூலமான விற்பனைகள் | 860,000 | 914,362 |
| முதலீடுகளை (விற்பதும்) ∴ கொள்வனவு செய்தலும் | 57,899,593 | (93,342,699) |
| விற்பனை (முதலீடுகளிலிருந்தான வெளிப்பாய்ச்சல்) நடவடிக்கைகள் | (28,017,573) | 153,688,252 |
| **முதலீட்டு நடவடிக்கைகளின் மூலமான தேறிய காசு உட்பாய்ச்சல்** | 7,087,912 | (31,031,491) |
| **நிதியிடல் நடவடிக்கைகளின் மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| | **0** | |
| பெற்றுக்கொள்ளப்பட்ட கொடைகள் | **0** | 48,214,520 |
| **நிதி நடவடிக்கைகளின் மூலமான தேறிய காசு உட்பாய்ச்சல் ∴ (வெளிப்பாய்ச்சல்)** | 0 | 48,214,520 |
| **காசு மற்றும் காசு இணைகளினான தேறிய (குறைவு) ∴ அதிகரிப்பு** | 5,126,222 | 4,360,370 |
| **வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசு இணை (குறிப்பு 10)** | 12,938,296 | 8,577,926 |
| **வருட முடிவில் காசு மற்றும் காசு இணை (குறிப்பு 10)** a) | 18,064,517 | 12,938,296 |
| **அ) காசு மற்றும் காசு இணைகளின் இணக்கக்கணக்கு** | | |
| **வங்கியிலுள்ள பணம்** | 18,024,517 | 12,901,296 |
| **கையிலுள்ள பணம்** | 40,000 | 37,000 |
| | 18,064,517 | 12,938,296 |

## கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனம் - இலங்கை
## நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள்

2011 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவுற்ற வருடத்துக்கானது

### 1. அமைவிடம் மற்றும் சட்ட வடிவம்

கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனமானது 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பாராளுமன்ற சட்டம் ஒன்றின் மூலம் உருவாக்கப்பட்டது. அது 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் சட்ட ரீதியான ஒரு நிறுவனமாக முறையாக அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான சேவை நிலையமும் இலக்கம் 100/20 சுதந்திர சதுக்கம் கொழும்பு 7 இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

### 1.1 பிரதான நடவடிக்கைகளும் செயற்பாடுகளின் தன்மையும்

கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் பிரதான நடவடிக்கை இலங்கையில் கொள்கை மையப்படுத்திய பொருளாதார ஆய்வுகளை ஊக்குவிப்பதும் நடுத்தரத் தவணை கொள்கை பகுப்பாய்வுகளுமாகும்.

### 1.2 தயாரிப்பு அடிப்படை

#### 1.2.1. இணக்க அறிக்கை

கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் நிதி அறிக்கைகளானவை, நிதி முன்னேற்ற அறிக்கை, நிதி நிலைமை பற்றிய அறிக்கை, உரிமை பங்கிலான மாற்றங்கள் பற்றிய அறிக்கை, காசுப் பாய்ச்சல் பற்றிய அறிக்கை மற்றும் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இவ்வறிக்கைகள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள பொதுத் துறை நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப தயாரிக்கப்படுகின்றன.

இந்நிறுவனமானது அண்மையில் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப செயற்பட இணங்கியுள்ளது. அந்நியமங்களானவை 2011 ஜனவரி முதலாம் திகதி அன்று முதல் அல்லது அதன் பின்னர் துவங்கும் நிதியியல் காலப்பகுதிக்கு செல்லுபடியானவையாக அமையும். இருப்பினும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை ஏற்றுக் கொள்வதன் விளைவாக முந்திய வருடத்துக்குரிய தொகைகள் மீது அவை தாக்கம் செலுத்த மாட்டா.

#### 1.2.2. அளவீட்டு அடிப்படை

நிதி அறிக்கைகளானவை முந்திய ஆண்டின் செலவு அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

#### 1.2.3. செயற்பாடு குறித்த மதிப்பீடு

இந்நிறுவனமானது தனது செயற்பாடுகளை எதிர்வரும் காலங்களில் தொடர்வதற்கான போதுமான வழங்களைக் கொண்டிருப்பதாக ஆளுனர் சபை திருப்தி காண்கிறது. அவ்வகையில் செயற்பாடு குறித்த திருப்தியின் அடிப்படையிலேயே நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

### 1.3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம்

**1.3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம்**

இங்கு முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து வருடங்களுக்குமான அறிக்கைகளை தயாரிப்பதில் இக்கொள்கைகள் நிலையாக அமுல்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் பணிக் கொடைக்கான முன்னேற்பாட்டின் போது மாத்திரம் இக்கொள்கைகளின் சில தளர்வுகள் காட்டப்பட்டன. அது பற்றி குறிப்பு "ஓ" வீல் கூறப்பட்டுள்ளது. கணக்கீட்டுக் கொள்கையிலான அந்த மாற்றம் திரட்டிய மிகை / பற்றாக்குறை ஒதுக்குகளின் கீழான உரிமைப்பங்கு மாற்றங்கள் குறித்த அறிக்கையினூடு சரிப்படுத்தப்பட்டுள்ளது.

**(அ) வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்**

இந்நிதி அறிக்கைகள், நிறுவனத்தின் செயலாற்றுகை நாணய அழகான இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளன.
வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் அவை நிகழ்ந்த திகதியில் காணப்பட்ட நாணயமாற்று வீதங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களை நிகழ்த்துவதன் விளைவாகவும் மற்றும் வெளிநாட்டு நாணயங்களின் பெயரிடப்பட்ட நிதிச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் மாற்றுவதனாலும் ஏற்பட்ட பெறுகைகளும் இழப்புக்களும் நிதி முன்னேற்ற அறிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அத்தகைய மீதிகள் நிதிவருட முடிவில் நாணயமாற்று வீதங்களாக மாற்றப்பட்டுள்ளன.

**(ஆ) சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணம்**

சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணம் ஆகியன செலவு குறைந்த திரட்டிய பெறுமானத் தேய்விலும் மற்றும் பெறுமானத் தேய்வு இழப்புக்களிலும் காட்டப்பட்டுள்ளன. ப

பின்னர் ஏற்படும் செலவிலும்
சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் ஏதாவது ஒன்றின் ஒரு பகுதியை மாற்றியமைப்பதற்கு ஏற்படும் செலவினம் தனியாக கணக்கிடப்பட்டு, பிரதான பரிசோதனை மற்றும் ஒட்டுமொத்தச் செலவினங்களையும் உள்ளடக்கி மூலதனமாக காட்டப்பட்டுள்ளது. ஏனைய பின்னர் ஏற்படும் செலவினங்கள், சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் ஏதாவதொன்றில் உள்ளடங்குகின்ற எதிர்கால பொருளாதார நன்மைகளை அதிகரிக்கச் செய்தால் மாத்திரமே மூலதனமாகக் காட்டப்படும். ஏனைய அனைத்துச் செலவினங்களும் நிதி முன்னேற்ற அறிக்கையில் அவை எதற்காக ஏற்பட்டதோ அதற்கானதாகவே ஏற்றுக் கொள்ளப்படும்.

பெறுமானத் தேய்வானது நேர்வரிசை முறையில் பின்வரும் வருடாந்த வீதங்களைப் பயன்படுத்தி குறித்த சொத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பயனுள்ள பொருளாதார ஆயுளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும்.

| | |
|---|---|
| கணனி உபகரணம் | 33% |
| இணையத்தள வடிவமைப்பு | 33% |
| மோட்டார் சைக்கிள் | 20% |
| தளபாடம் | 20% |
| அலுவலக உபகரணம் / மின்பிறப்பாக்கி | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| நூலகப் புத்தகங்கள் | 25% |
| கட்டிடங்கள் | 02% |

சொத்தொன்றின் பெறுமானத் தேய்வானதானது அது பயன்படுத்தப்படுவதற்காக காணப்படும் போது ஆரம்பிக்கிறது. அச்சொத்தின் பெறுமானத் தேய்வு நிறைவடையும் போது அத்திகதி

முதல் அது விற்பனைக்குரியதாக வகைப்படுத்தப்பம். அத்திகதி முதல் அது சொத்துக்கள் பட்டியலிலிருந்து நீக்கப்படும்.

**தேய்வு**

சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் தாங்கு பெறுமதியை மீளப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை காட்டுகின்ற நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவற்றின் தாங்கு பெறுமதியானது தேய்வுக்காக மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். சொத்தொன்றின் தாங்கு பெறுமதியானது அதன் மதிப்பிடப்பட்ட மீளப் பெற்றுக் கொள்ள முடியுமான தொகையை விட கூடுதலானதாக இருக்கும் சந்தர்ப்பத்தில் உடனடியாகவே அத்தாங்கு பெறுமதியானது அதன் மீளப் பெற்றுக் கொள்ள முடியுமான தொகையின் அளவுக்கு குறைக்கப்படும்.

**(இ) குத்தகைகள்**

ஒரு குத்தகையாளர் சொத்துக்களை குத்தகையாகப் பெற்று அவற்றின் மூலமான நிச்சயமின்மைகளுக்கும் மற்றும் நன்மைகளுக்கும் தானே பொறுப்பு என ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் அக்குத்தகை இயங்கு குத்தகையாக வகைப்படுத்தப்படும். இயங்கு குத்தகைகளின் கீழான கட்டணங்கள் நிதி முன்னேற்ற அறிக்கைக்கு நேர் வரிசை அடிப்படையில் உரிய குத்தகைக் காலத்துக்காக அறவிடப்படும்.

உரிய குத்தகைக் காலம் முடிவுறுவதற்கு முன்னர் ஓர் இயங்கு குத்தகை முடிவுறுத்தப்படும் பட்சத்தில் குத்தகையாளருக்கு தண்டப் பணமாக ஏதும் கட்டணங்கள் வழங்க வேண்டி ஏற்பட்டால் அம்முடிவுறுத்தல் இடம் பெற்ற காலத்தினுள் நிகழ்ந்த ஒரு செலவாக அது கணிக்கப்படும்.

**(உ) முதலீடுகள்**

இம்முதலீடுகளானவை நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், பிணைகள் மற்றும் மீள கொள்வனவு உடன்படிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கியவையாகும்.

I. நிலையான வைப்புக்கள்

நிலையான வைப்புக்களிலான முதலீடுகள் செலவுப் பகுதியில் கணக்கிடப்படும். நிதி நிலைமை பற்றிய அறிக்கை திகதியில் ஒன்று சேர்ந்த வட்டியானது பெறத்தக்க வட்டிகளாக காட்டப்படும்.

II. திறைசேரி உண்டியல்கள் / திறைசேரி பிணைகள் / மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்

திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைகளிலான முதலீடுகள் நிதி நிலைமை பற்றிய அறிக்கைத் திகதியில் செலவுடன் கூடிய வட்டியாக காட்டப்படும்.

**(ஊ) மூலதனக் கொடைகள்**

சொத்து, பொறித் தொகுதி, உபகரணங்கள் ஆகியவற்றின் கொள்வனவுடன் தொடர்பான கொடைகள் பிற்படுத்தப்பட்ட வருமானமாக நடைமுறை சாரா பொறுப்புக்களின் கீழ் உரிய சொத்துக்களின் பெறுமானத் தேய்வு அடிப்படையுடன் முரணில்லாத வகையில் நிதி முன்னேற்ற அறிக்கையில் வரவு வைக்கப்படும்.

**(எ) இருப்புப் பதிவுகள்**

இருப்புப் பதிவு வெளியீடுகளின் கையிருப்பை உள்ளடக்கியிருக்கும். வெளியீடுகள் செலவுகளாக காட்டப்படும். 10 வருடங்களுக்கு மேலாக வைத்துக் கொள்ளப்பட்ட வெளியீடுகள் மெல்ல நகர்பவையாக கருதப்பட்டு ரத்துச் செய்யப்படும்.

**(ஏ) பெறத்தக்கவைகள்**

பெறத்தக்கவைகள் எதிர்பார்க்கப்படும் உணரத்தக்க வருமானமாக கருதப்படும். கடன் பெறுநர்கள் தொடர்ந்தேச்சையான அடிப்படையில் மீள் பார்வைக்கு உட்படுத்தப்படுவர். மீளப் பெற்றுக் கொள்ள முடியாதவை என அறியப்பட்ட கடன்கள் ரத்துச் செய்யப்படும். அறிவிட முடியாக் கடன்கள் அவை அடையாளம் காணப்பட்ட வருடத்தில் ரத்துச் செய்யப்படும்.

**(ஒ) காசு மற்றும் காசு இணைகள்**

காசுப் பாய்ச்சல் அறிக்கையின் நோக்கங்களுக்காக , காசு மற்றும் காசு இணைகள் வங்கியில் உள்ளதான, கையிலுள்ள பணம் மற்றும் வங்கியில் வைத்துக் கொள்ளப்பட்டுள்ள அழைப்பு வைப்புக்கள் வங்கி மேலதிக பற்றுக்களின் தேறிய தொகைகள் ஆகியவற்றை ஐந்தொகையில் வங்கி மேலதிகப் பற்றுக்கள் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்படும்.

**(ஓ) பொறுப்புக்கள் மற்றும் முன்னேற்பாடுகள்**

நிதி நிலைமை பற்றிய அறிக்கையில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களானவை கோரிய உடன் அல்லது நிதிநிலைமை பற்றிய அறிக்கைத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் செலுத்தப்படவேண்டியவையாகும். நடைமுறை சாரா பொறுப்புக்களான ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் செலுத்தப்படவேண்டிய மீதிகளாகும். இந்நிதி அறிக்கைகளை தயாரிப்பது அறியப்பட்டு அனைத்து பொறுப்புக்களும் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக குழுவுக்கு சட்ட ரீதியான அல்லது ஆக்க பூர்வமான கடமையொன்று ஏற்படுகின்ற போதும் அக்கடமையை நிறைவேற்ற பொருளாதார நன்மைகளின் வெளிப்பாய்ச்சல் ஒன்று நேரிடக்கூடிய சந்தர்ப்பத்திலும் பொறுப்புக்களுக்கான முன்னேற்பாடு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**(ஔ) ஊழியர் நன்மைகள்**

**I. வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்**

இந்நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றின் அங்கத்தவர்களாவர். இந்நிதிகளுக்கு நிறுவனமானது குறித்த ஊழியர்களின் அடிப்படை வேதனம் அல்லது சம்பளத்திலிருந்து முறையே 12% வீதத்தை 3% வீதத்தையும் வழங்குகிறது.

**II. வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம்**

திட்டமிடப்பட்ட அலகுக் கடன் முறையைப் பயன்படுத்தி, காப்புறுதிக் கணிப்பீட்டாளர் ஒருவரின் ஆலோசனையுடன் வடிவமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ஒரு நன்மைத் திட்டமான பணிக்கொடையின் ஓய்வூதிய நன்மைகளின் நடைமுறைப் பெறுமானத்தை இந்நிறுவனம் அளவிடுகிறது. இத்திட்டத்துக்கு பங்களிப்புச் செய்வோரில்

எதிர்பார்க்கப்படும் சராசரியாக எஞ்சும் வேலை செய்வோருக்கு மேலான வருமானமாக அல்லது செலவாக இவ் ஒன்று சேர்ந்த பெறுகைகளும் இழப்புக்களுமே ஏற்கப்படும்.

**(ஐ) வருமான ஏற்பு**

**I. இலங்கை அரசிடமிருந்தான பங்களிப்பு**

இலங்கை அரசிடமிருந்தான பங்களிப்பு ஒன்று சேரும் அடிப்படையில் ஏற்கப்படும்.

**II. செயற்திட்ட வருமானம்**

பொறுப்பேற்கப்பட்ட செயற்திட்டங்களின் நிறைவுக்கட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வருமானம் ஏற்கப்படும். செயற்திட்டங்களிலிருந்து கிடைக்கும் முற்பணப் பெறுகைகள் பிற்படுத்தப்பட்ட வருமானமாக வகைப்படுத்தப்பட்டு நிதி நிலைமை பற்றிய அறிக்கையில் நடைமுறைப் பொறுப்புக்களாக முன்வைக்கப்படும்.

**III. கருத்தரங்குகள் / செயலமர்வுகள் மூலமான வருமானம்**

கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் மூலமான வருமானம் கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டதும் ஒன்று சேரும் அடிப்படையில் ஏற்கப்படும்.

**IV. வட்டி வருமானம்**

வட்டி வருமானம் ஒன்று சேரும் அடிப்படையில் ஏற்கப்படும்

**(அஅ) மூலதனச் செலவினங்களுக்கான ஏற்பு**

நடவடிக்கைகளை முன்கொண்டு செல்ல அல்லது சம்பாத்திய இயலுமையை கூட்டிக் கொள்ளவென நிலையான தன்மை கொண்ட சொத்துக்களை கைக்கொள்ளல், விரிவாக்குதல் அல்லது மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுக்காக ஏற்பட்ட செலவினங்கள் மூலதனச் செலவினங்களாக கொள்ளப்படும்.

**செலவுகளை வகைப்படுத்துதல்**

நிதி முன்னேற்ற அறிக்கையை முன்வைக்கும் நோக்கத்துக்காக, ஆளுனர்கள் பின்வரும் கருத்தை உடையோராக உள்ளனர் : அதாவது செலவு முறையின் தன்மையானது நிறுவனத்தின் முன்னேற்றத்தின் கூறுகளை நேர்மையாக முன்வைக்கிறது. அதனால் இம்முன்வைப்பு முறை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனம் - இலங்கை

நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள்

*2012 டிசம்பர் 31 ம் திகதியுடன் முடிவுற்ற வருடத்துக்கானது*

**2. இலங்கை அரசிடமிருந்தான பங்களிப்பு**

நிறுவனத்தின் வாடகைக்கும் நடத்துகைக்குமாக இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்ட அனைத்து

| | | 2011 | 2010 |
|---|---|---|---|
| | | Rs. | Rs. |
| 3. | **செயற்திட்ட வருமானம்** | | |
| | செயற்திட்டங்களிலிருந்தான வருமானம் - நிறுவனங்கள் | 32,713,173 | 29,339,789 |
| | சர்வதேச அபிவிருத்தி ஆய்வு நிலையத்திலிருந்தான வருமானம் | 21,447,639 | 677,996 |
| | | 54,160,812 | 30,017,784 |
| 4. | **கருத்தரங்குகள், செயலமர்வுகள் மூலமான வருமானம்** | | |
| | கொடையாளர்களின் கோரிக்கையின் பேரில் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் | | |
| | செயலமர்வுகள் மூலமான வருமானத்தையும் இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப் | | |
| 5. | **நாணாவித வருமானம்** | | |
| | வெளியீடுகளின் விற்பனை | 746,289 | 529,388 |
| | நிலையான சொத்துகக்ளின் விற்பனை மூலமான இலாபம் | 860,000 | 520,873 |
| | வேறு வருாமனம் | 167,747 | 201,681 |
| | | 1,774,036 | 1,251,942 |
| 6. | **ஊழியச் செலவு** | | |
| | நிறுவனப் பணியாளர் சம்பளம் | 32,626,503 | 27,674,416 |
| | ஊழியர் சேமலாபநிதி | 3,916,461 | 3,295,899 |
| | ஊழியர் நம்பிக்கை நிதி | 981,008 | 828,183 |
| | கௌரவக் கொடை (குறிப்பு 6.1) | 3,388,887 | 2,248,069 |
| | பணியாளர் நலன்புரிச் செலவு | 3,681,077 | 4,703,250 |
| | வேறு நன்மைகள் | 1,777,922 | 2,018,331 |
| | பணிக்கொடைக்கான முன்னேற்பாட்டின் குறைப்பு (குறிப்பு 17) | | (117,103) |
| | | 46,371,858 | 40,651,046 |
| 6.1. | **கௌரவக் கொடை** | | |
| | ஆளுனர் சபைக்கு வழஙக்ப்பட்ட கொடுப்பனவுகளை உள்ளடக்கியது | 544,000 | 387,000 |
| 7. | **ஆய்வுச் செலவு** | | |
| | வெளியீடுகளை தட்டச்சிடுவதற்கும் அச்சிடுவதற்குமான செலவு | 2,571,472 | 2,242,602 |
| | இணைய கட்டணங்கள் | 1,907,138 | 1,886,115 |
| | ஆலொசனைக் கட்டணங்கள் | 7,362,336 | 5,856,184 |
| | வேறு ஆய்வுச் செலவுகள் | 1,448,709 | 1,770,558 |
| | | 13,289,655 | 11,755,459 |
| 8. | **வேறு இயங்கு செலவுகள்** | | |
| | அறவிட முடியாக் கடன் | - | 520,000 |
| | பதிவு மற்றும் அங்கத்துவக் கட்டணம் | 604,525 | 424,139 |
| | அச்சுச் செலவு | 58,993 | 18,445 |
| | அலுவலக்ச் செலவுகள் | 737,389 | 1,458,245 |
| | நுகர்வுகள் | 476,042 | 1,089,550 |
| | தொழில்வான்மை மற்றும் சட்டக் கட்டணங்கள் | 306,861 | 162,003 |
| | கணக்காய்வுக் கட்டணங்கள் | 90,244 | 90,000 |
| | விளம்பரங்கள் | 60,200 | 459,424 |
| | வங்கிக் கட்டணங்கள் ∴ தரகுக் கட்டணம | 206,870 | 356,849 |
| | வேறு நிர்வாகச் செலவுகள் | 119,089 | 355,755 |
| | குத்தகை வாடகை | 780,000 | 780,000 |
| | நானாவித செலவுகள் | 45,000 | 40,800 |
| | | 3,485,215 | 5,755,210 |

கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனம் - இலங்கை

நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

| *2012 டிசம்பர் 31 ம் திகதியுடன் முடிவுற்ற வருடத்துக்கானது* | | 2011 | 2010 |
|---|---|---|---|
| | | **Rs.** | **Rs.** |
| **9.** | **வருமான வரிச் செலவு** | | |
| | **நடைமுறை வரிச் செலவு** | | |
| | 1988 இன் இலங்கை கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனச்சட்டம் இலக்கம் 53 பிரிவு 19(4) ன் படியும் 1990 ன் 42 ம் இலக்க உள்நாட்டு வருமான (திருத்த) சட்டத்தின் பிரிவு 2(3) LIX ன் படியும் கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் இலாபங்களும் வருமானமும் வரிவிலக்களிக்கப்படுகின்றன. | | |
| **10.** | **காசு மற்றும் காசு இணைகள்** | | |
| | வங்கியிலுள்ள பணம் | 6,024,617 | 1,788,278 |
| | அழைப்புக் கணக்கில் உள்ள பணம் | 11,999,900 | - |
| | வங்கியிலுள்ள பணம் - வெளிநாட்டு நாணயம் (குறிப்பு 10.1) | - | 11,113,017 |
| | சிறு பணம் | 40,001 | 37,000 |
| | | 18,064,518 | 12,938,296 |
| **10.1** | **வங்கியிலுள்ள பணம் - வெளிநாட்டு நாணயம்** | | ; |
| | யூரோ கணக்கு | - | 11,113,017 |
| | | - | 11,113,017 |
| **11.** | **வைப்புக்களும் முன்கட்டணங்களும்** | | |
| | முன்கட்டணங்கள் (குறிப்பு 11.1) | **1,676,423** | 1,212,298 |
| | வைப்புக்கள் | **296,000** | 696,000 |
| | புதிய கட்டிடத்துக்கான முற்பணம் உப ஒப்பந்தாக்காரர்கள் | | 937,516 |
| | வேறு முற்பணங்கள் | **267,710** | 47,060 |
| | | **2,240,133** | 2,240,133 |
| **11.1** | **முன் கொடுப்பனவுகள்** | | |
| | மருத்துவக் காப்புறுதி | **855,957** | 809,266 |
| | வேறு காப்புறுதி | **397,484** | 385,552 |
| | வேறு முன் கொடுப்பனவுகள் | **422,982** | 17,480 |
| | | **1,676,423** | 1,212,298 |
| **12.** | **வேறு பெறத்தக்கவைகள்** | | |
| | வேறு பெறத்தக்கவைகள் (குறிப்பு 12.1) | **1,914,624** | 7,111,030 |
| | பணியாளர் கடன்பெறுநர்கள் | **2,170,903** | 1,792,746 |
| | தே.க.வ. பெறத்தக்கவைகள் | - | 56,004 |
| | | **4,085,528** | 8,959,780 |
| **12.1** | **வேறு பெறத்தக்கவைகள்** | | |
| | இலங்கை அரசாங்கத்திடமிருந்தான பங்களிப்பு - 4ம் காலாண்டுக்கான ஒதுக்கு | **793,845** | 5,793,845 |
| | நன்கொடையாளர்களிடமிருந்து பணியாளர்களுக்கான விமான டிக்கட் மீளளிப்புக்கள் | **851,475** | 1,084,975 |
| | வேறு பெறத்தக்கவைகள் | **269,304** | 232,210 |
| | | **1,914,624** | 7,111,030 |

*2011 டிசம்பர் 31 ம் திகதியுடன் முடிவுற்ற வருடத்துக்கானது*

**13. சொத்து பொறித் தொகுதி மற்றும் உபகரணம்**

| செலவு | குத்தகை நிலத்திலான கட்டிடம் | கணனி உபகரணம் | மோட்டார் வாகனம் | தளபாடம் மற்றும் இணைப்புக்கள் | அலுவலக உபகரணம் | நூலகப் புத்தகங்கள் | Total |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | Rs. |
| 2011 ஜனவரி 01 ம் திகதியிலான மீதி | 300,824,754 | 31,481,429 | 10,604,125 | 13,547,166 | 8,367,873 | 1,234,366 | 366,059,713 |
| இணைப்புக்கள் | 23,244,225 | 2,409,415 | - | 5,429,440 | 13,837,358 | 5,500 | 44,925,938 |
| குறைக்க : நீக்கல்கள் | - | - | - | - | - | - | - |
| 2011 டிசம்பர் 31ம் திகதியிலான மீதி | | | | | | | - |
| | 324,068,979 | 33,890,844 | 10,604,125 | 18,976,606 | 22,205,231 | 1,239,866 | 410,985,651 |
| **திரட்டிய பெறுமானத் தேய்வு** | | | | | | | |
| 2011 ஜனவரி 01 ம் திகதியிலான மீதி | 1,504,124 | 21,732,949 | 7,964,124 | 1,213,954 | 814,554 | 1,217,205 | 34,446,910 |
| பெறுமானத் தேய்வுக் கட்டணங்கள் | 4,637,866 | 4,245,613 | 1,320,000 | 3,369,610 | 2,945,488 | 3,216 | 16,521,793 |
| குறைக்க : நீக்கல்கள் | | | | | | | - |
| 2011 டிசம்பர் 31ம் திகதியிலான மீதி | 6,141,990 | 25,978,562 | 9,284,124 | 4,583,564 | 3,760,042 | 1,220,421 | 50,968,703 |
| **தாங்கும் பெறுமதி** | | | | | | | |
| 2011 டிசம்பர் 31ம் திகதியிலுள்ளவாறு | **317,926,989** | **7,912,283** | **1,320,001** | **14,393,042** | **18,445,189** | **19,445** | **360,016,948** |
| 2010 டிசம்பர் 31ம் திகதியிலுள்ளவாறு | 299,320,631 | 9,748,479 | 2,640,001 | 12,333,212 | 7,553,318 | 17,161 | 331,612,802 |

| *2012 டிசம்பர் 31 ம் திகதியுடன் முடிவுற்ற வருடத்துக்கானது* | | 2011 | 2010 |
|---|---|---|---|
| | | Rs. | Rs. |
| **14.** | **முதலீடுகள்** | | |
| | மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் | **13,915,303** | 98,475,670 |
| | திறைசேரி உண்டியல்கள் (குறிப்பு 14.1) | **95,679,986** | 69,419,418 |
| | திறைசேரி உண்டியல்கள் (குறிப்பு 14.1) - பணிக்கொடை நிதி) | **11,065,712** | 10,847,270 |
| | திறைசேரி உண்டியல்கள் (குறிப்பு 14.1) - பணியாளர் நலன்புரிநிதி) | **1,176,955** | 995,191 |
| | திறைசேரி உண்டியல்கள் (குறிப்பு 14.1) | **0** | 19,911,976 |
| | நிலையான வைப்புக்கள் | **66,748,349** | 18,818,800 |
| | | **188,586,304** | 218,468,324 |
| **14.1** | **முதலீடுகளின் சந்தைப் பெறுமதி** | | |
| | திறைசேரி உண்டியல்கள் | **107,616,895** | 81,267,450 |
| | திறைசேரிப் பிணைகள் | | 20,942,320 |
| | | **107,616,895** | **102,209,769** |
| **15.** | **வர்த்தக மற்றும் வேறு செலுத்துகைகள்** | | |
| | கடனாளிகள் | **10,561,838** | 5,893,135 |
| | ஒன்று சேர்ந்த வருமானங்கள் (குறிப்பு 15.1) | **2,105,649** | 2,100,525 |
| | செலுத்தப்படவேண்டிய நிறுத்தி வைக்கப்பட்ட வரி | **(25,237)** | 771,462 |
| | காசோலை திரும்புதல் கட்டுப்பாட்டுக் கணக்கு | **0** | 169,500 |
| | செலுத்தப்படவேண்டிய ஊழியர் சேமலாபநிதி | **636,032** | **0** |
| | செலுத்தப்படவேண்டிய தே.க.வ. | **18,042** | **0** |
| | ீயுலுநு ியலயடிடந | **93,329** | **0** |
| | | **13,389,653** | 8,934,622 |
| **15.1** | **ஒன்று சேர்ந்த வருமானங்கள்** | | |
| | ஆய்வுச் செயற்திட்ட செலவுகள் | **628,179** | 896,312 |
| | தொலைபேசி / இணைய கட்டணங்கள் | **280,000** | 696,993 |
| | கணக்காய்வுக் கட்டணங்கள் | **415,000** | 325,000 |
| | மின்சாரம் | **578,832** | 160,000 |
| | வேறு அலுவலகச் செலவுகள் | **94,462** | 22,219 |
| | எரிபொருள் | **109,175** | **0** |
| | | **2,105,649** | 2,100,525 |
| **16.** | **செயற்திட்டங்களுக்கான முற்பணப் பெறுகை** | | |
| | ஜனவரி 1 ம் திகதியிலான மீதி | **26,679,276** | 12,151,689 |
| | வருடத்திலான பெறுகைகள் | **48,568,778** | 51,645,910 |
| | அங்கீகரிக்கப்பட்ட வருமானம் | **(58,156,993)** | (37,118,324) |
| | டிசம்பர் 31ம் திகதியிலான மீதி | **17,091,061** | 26,679,276 |

நிறைவு செய்யப்படாத செயற்திட்டங்கள் மூலமான வருமானம் ஐந்தொகையில் பிற்படுத்தப்பட்டு செயற்திட்டங்களுக்கான காலத்துக்கு மேலான வருமானமாக ஏற்கப்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பெறுகைகளோடு சேர்த்து முன்கொண்டு வரப்பட்ட தொகையானது இச்செயல்திட்டங்களுக்கான எதிர்காலச்

கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனம் - இலங்கை

நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

| 2012 டிசம்பர் 31 ம் திகதியுடன் முடிவுற்ற வருடத்துக்கானது | | 2011 | 2010 |
|---|---|---|---|
| **ஊழியர் நன்மைகள்** | | | |
| ஜனவரி 01 ம் திகதியிலான மீதி | | **7,478,652** | **4,527,590** |
| வருடத்தில் ஏற்கப்பட்ட செலவு | குறிப்பு (17.1) | **2,117,104** | **3,363,361** |
| வருடத்தில் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் | | **(568,123)** | **(412,300)** |
| | | **9,027,633** | **7,478,651** |
| டிசம்பர் 31ம் திகதியிலான மீதி | | **9,027,633** | **7,478,651** |

2011 டிசம்பர் 31ம் திகதியில் உள்ளவாறு நிறுவனத்தின் ஊழியர் எண்ணிக்கை 56 ஆகும் (2010 - 61)

2011 டிசம்பர் 31ம் திகதிக்கு ஊழியர் நன்மைகளுக்கு தகுதிபெறும் ஊழியர் எண்ணிக்கை 46 ஆகும் (2010-46)

பொறுப்புகளுக்காக வெளிவாரி நிதிகள் பெறப்படவில்லை என்பதோடு தொழில் வாண்மையுள்ள ஒரு

இந்நன்மைகளை வழங்குவதற்காக நிறுவனத்துக்கு ஏற்படும் செலவை தீர்மானிப்பதற்கு பின்வரும்

| | | |
|---|---|---|
| விலைக்கழிவு வீதம் | 10.50% | (2009-11%) |
| சம்பள வீதத்திலான அதிகரிட் | 5% | (2009-5%) |
| மொத்த பணியாளர் வீதம் | 7% | |

| | 2011 | 2010 |
|---|---|---|
| **வருடத்தில் ஏற்கப்பட்ட செலவு** | Rs | Rs |
| நடைமுறைச் சேவை செலவு | 811,998.00 | 768,105.00 |
| வட்டிச் செலவு | 785,258.00 | 498,035.00 |
| ஒன்றுசேர் பெறுகை ∴ இழப்பு | 519,848.00 | 2,097,221.00 |
| | 2,117,104.00 | 3,363,361.00 |
| | - | |

| | 2011 | 2010 |
|---|---|---|
| | Rs. | Rs. |
| **பிறப்டுத்தப்பட்ட வருமானம் - மூலதனக் கொடைகள்** | | |
| ஜனவரி 01 ம் திகதியிலான மீதி | **312,132,649** | 265,422,253 |
| வருடத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட கொடைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன. | - | |
| நெதர்லாந்து அரசிடமிருந்தான கொடை | - | **13,214,520** |
| அறக்கட்டளை நிதியிலிருந்தான கொடை | | **35,000,000** |
| வருடத்திலான தவணை முறை கடன் கழிப்பு | **(6,274,023)** | **(1,504,124)** |
| டிசம்பர் 31 ம் திகதியிலான மீதி | **305,858,626** | **312,132,649** |

**19. குத்தகைப் பொறுப்பு**

30 வருடங்களுக்கான இயங்கு குத்தகை ஏற்பாட்டின் படி காணி ஆணையாளருக்கு சொந்தமான நிலத்தில் கட்டிடத்தை கட்டியமைக்காக வருடாந்தம் ரூ. 780,000 ஐ செலுத்த வேண்டிய பொறுப்பு இந்நிறுவனத்துக்கு உள்ளது. இருப்பினும் இக்காணியை இலங்கை அரசின் கொடையாக பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இயங்கு குத்தகையின் கீழ் பின்வரும் ஒவ்வொரு காலப்பகுதிகளுக்குமான அதிகுறைந்த எதிர்கால கொடுப்பனவுகளின் மொத்தம் பின்வருமாறு.

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு குறைவான கால | ரூ. 780,000 |
| 1-5 வருடம் வரை | ரூ. 3,900,000 |
| 5 வருடங்களுக்கு மேல் | ரூ. 14,040,000 |

**20. மூலதனப் பொறுப்பு**

31.12.2011 அன்று எவ்வித மூலதனப் பொறுப்புக்களும் காணப்படவில்லை

**21. சம்பந்தப்பட்ட தரப்பு கொடுக்கல் வாங்கல்கள்**

இந்நிறுவனமும அறக்கட்டளை நிதியமும் ஒரே ஆளுனர் சபையாலேயே நிர்வகிக்கப்படுகிறது. இவ்வருடத்தில் நிறுவனமானது தனது நடவடிக்கைகளுக்காக ரூ. 7,500,000 ஐ பங்களிப்பாக பெற்றுக் கொண்டுள்ளது.

மீணடெழும் செலவினங்களுக்காக இந்நிறுவனத்துக்கு இலங்கை அரசாங்கம் ரூ. 14,000,000 ஐ மானியமாக வழங்கியுள்ளது.

**22. எதிர்பாரா நிகழ்வுகளுக்கான பொறுப்புக்கள்**

ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு எதிர்பாரா நிகழ்வுப் பொறுப்புக்கள் எதுவுமில்லை.

**23. ஐந்தொகைத் திகதியின் பின்னரான நிகழ்வுகள்**

நிதி அறிக்கையில் சீராக்கல்களைச் செய்ய வேண்டிய அல்லது வெளிப்படுத்த வேண்டிய எந்த நிகழ்வும் ஐந்தொகைத் திகதியின் பின்னர் ஏற்படவில்லை.

**24. ஆளுனர் சபையின் பொறுப்பு**

இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதி அறிக்கைகளை தயாரித்து முன்வைப்பது ஆளுனர் சபையின் பொறுப்பாகும். இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல்லாத விடயங்களில் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படும்.

IPS

*Research. Inform. Impact.*

100/20, Independence Avenue, Colombo 7, Sri Lanka, Tel: +94-11-2143100/2665068, Fax: +94-11-2665065,E-mail: ips@ips.lk URL: http://www.ips.lk,
Blog 'Talking Economics': www.ips.lk/talkingeconomics,Twitter: @TalkEconomicsSL, Facebook: www.facebook.com/instituteofpolicystudies